Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 09 புதன்கிழமை (24.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 085

# வெளியாகியது மகிந்தவின் விஞ்ஞாபனம்

★ படை வசமுள்ள காணிகள் கையளிப்பு
★ பயங்கரவாத கைதிகளை விடுவிக்க ஏற்பாடு
★ யுத்த பாதிப்புக்கு நட்ட ஈடு
★ புதிய அரசியல் யாப்பு விரைவில்

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னணி வேட்பாளர்களில் ஒருவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று உத்தியோக பர்வமாக வெளியிட்டுள்ளார். மகிந்த சிந்தனையின் அடுத்த கட்டநகர்வாகவும்புதிய அம்சங்களுடனான மகிந்த சிந்தனையின் தொடர்ச்சியு மாக இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டிருக்கிறது.**



'உலகத்தை வெல்லும் வழி' என்ற பெயரில் வெளியிடப் பட்டிருக்கும் இந்த விஞ்ஞாபனத்தில் நாடு முழுவதையும் பாரபட்சமின்றி அபிவிருத்திப்பாதைக்கு இட்டுச் செல்லும் கருத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இதைவிட நாட்டை ஒற்றை ஆட்சிக்குள் தொடர்ந்தும் வைத் திருக்கக்கூடிய வகையான புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க போவதாகவும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சமுகமளிக்கவில்லை ஹக்கீம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று கொழும் பில் வெளியிடப்பட்ட போது அந்த நிகழ்வில் அரசின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பங்குபற்றினர்.

எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் கட்சியின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் எவரும் அந்த நிகழ் வில் பங்கெடுக்கவில்லை.

அத்துடன் முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்ரமநாயக்க பங்கேற்க வில்லை. ரட்ணசிறி விக்ரமநாயக்க கட்சி தாவு வார் என பெரிதும் எதிர்பார்க்கப் பட்டது. இந்தநிலையில் நேற்றைய நிகழ வில் அவர் பங்கேற்காதது குறித்து அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் முதன்மையான கோரிக கைகள் அனைத்தும் ஜனாதிபதி மகிந்த வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள் வாங்கப் பட்டிருப்பதாலும் அவை நிறை வேற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டி ருப்பதாலும் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தாம் வரவேற்பதாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி நேற்று மாலை அறிவித்தது.

இவ்விடயம் தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு,

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் 'யாரைஆதரிக்கவேண்டும்' என்றதலைப்பில் எமது மக்களுக்கு நாம் கூறிய கருத்துக்கள் நிதர்சனமானவை என்பதை காலம் மீண்டுமொருமுறை உணர்த்தியிருக்கின்றது.

### ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வரவேற்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியானால் எமது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவார் என்று நாம் கூறினோம். எமது மக்களின் பிரதான தேவைகளை பத்து அம்சக் கோரிக கையாக நாம் ஜனாதிபதியிடம் முன்வைத் திருந்தோம்.

அதில் அரசியல் தீர்வு, இழந்த நிலங் களை மீளப்பெறுவது, அர்த்தபூர்வமான மீள் குடியேற்றம், இழப்புக்களுக்கான போதிய நட்டஈடு, இளைஞர், யுவதிக ளுக்கு வேலைவாய்ப்பு, அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட தேசத்தின் மகுடம் திட்டத்தை வடக்கில் நிறைவேற்றுதல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்தும் திட்டம், சகல மதங்க ளையும் அனுசரிப்பதற்கான பூரண சுதந்திரம், சமூக ஒற்றுமைக்கான பாது காப்பு போன்ற முக்கியமான எமது கோரிக் கைகளை ஜனாதிபதி தனது மகிந்தசிந்த னையின் மூன்றாவது கட்டமான 'உலகை வெல்லும் வழி'எனும் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கரிசனையோடு உள் வாங்கி இருப்பதை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

நாம் ஏற்கனவே கூறியதுபோல் அரசி யல் ரீதியான அழுத்தங்களையும், எதிர்ப் புக்களையும் துணிச்சலோடு எதிர் கொண்டு இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை நிறைவேற் றித்தருகின்ற ஆளுமைமிக்க தலைவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கே.பாலச்சந்தர் காலமானார்

தமிழ் திரையுலகில் இயக்குனர் சிகரம் என்று புகழப்படும் கே.பாலச்சந்தர் நேற்று காலமானார். அவருக்கு வயது 84.



நூறுக்கும் மேற்பட்ட படங்களை இயக்கியுள்ள கே. பாலச்சந்தர், கடந்த வாரம் சென்னையில் உள்ள காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். 1960களில் தனது திரை உலக பயணத்தை துவக்கிய கே. பாலச்சந்தர், தமிழ், தெலுங்கு, இந்தி,

(19) ஆம் பக்கம் பார்க்க

## உயர்தர பெறுபேறு வார இறுதியில்

நடந்து முடிந்த க.பொ.த உ/த பரீட்சை பெறுபேறு எதிர்வரும் 27 அல்லது 28ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சை கள் திணைக்களம் தெரிவித்துள் ளது.

விடைத்தாள் திருத்தும் பணி கள் நிறைவுற்று தற்போது பெறு பேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## தபால் மூலவாக்களிப்பு அமைதியாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க திணைக்களங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்பு நேற்று அமைதியான முறையில் நடந்தேறியுள்ளது. பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள், பொலிஸ் நிலையங்கள், வலய கல்வி அலுவலகங்கள் என மாவட்ட மட்டத்தில் அஞ்சல் வாக்களிப்பு இடம்பெற்றன.

இன்று 2 ஆவது நாளாகவும் வாக்களிப்புக்கள் இடம் பெறும்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் முகவர்கள் நேற்று பிரசன்னமாகி யிருந்தனர். (92)

## கிழக்கு மாகாண தவிசாளர் எதிரணிக்கு தாவினார்

கிழக்கு மாகாணசபையின் தவிசாளர் எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டுள் ளார்.

கிழக்கு மாகாண சபையின் தவிசா ளர் பிரியந்த பத்திரணவே இவ்வாறு ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க் கட்சியில் நேற்று இணைந்து கொண் டுள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இத னைப் பகிரங்கமாக அறிவித்தார்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் பத்திரண போட்டியிட்டு வெற்றி யீட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபையின் தவிசாளர் பத வியை துறந்ததைத் தொடர்ந்து கிழக்கு மாகாணசபை ஆளும் கட்சியை விட்டு போகக்கூடிய அபாய நிலைமை ஏற்பட் டுள்ளது.

அதேவேளை, அதுரலிய ரத்ன தேர ரின் ஆலோசனைக்கு அமைய பத்திரண தமக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ள தாக மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.



## மணல் கடத்தலில் ஈடுபட்ட மூவர் அரியாலையில் கைது

அரியாலைப் பகுதியில் சட்ட விரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 3 பேர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், உழவு இயந்திரமும் கைப்புற்றப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு அரியாலை கிழக்குப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் கடத்தி வந்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் இவர்களைக் கைது செய்ததுடன், உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியதுடன் இவர்களை இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ. 25)

## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் வழக்கிலக்கங்களை இனங்காண முடியாத துவிச்சக்கர வண்டிகளின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்.நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்படும்.

குறித்த பகிரங்க ஏலவிற்பனையில் துவிச்சக்கர வண்டிகளினைப் பெற்றுக் கொள்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். அத்துடன் பெற்றுக்கொள்ளும் துவிச்சக்கர வண்டிகளை அன்றைய தினம் உடனடியாகவே நீதிமன்ற வளாகத்தில் இருந்து அகற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


DDTV யின்

# மாபெரும் இசை உலா....

யாழ்.முன்னணி இசைக்கலைஞர்கள் பங்குபற்றும்

**ஈழத்து இளைய சௌந்தரராஜன் ஏ.அருள்ஜோதியின்**

**இசை நிலா இசைக்குழு**

இடம் : மானிப்பாய் செல்லமுத்து மைதானம்

காலம் : 25.12.2014, நேரம் : 06.00 - 09.00

- ☐ நீங்கள் பாடும் திறமை கொண்டவரா
- ☐ நீங்கள் நடிப்புத் திறமை கொண்டவரா
- ☐ நீங்கள் பல்குரல் வித்தகரா
- ☐ நீங்கள் சிறந்த அறிவிப்பாளரா

நீங்களும் இந் நிகழ்வில் பங்குபற்றுவதற்கு ஓர் அரியசந்தர்ப்பம்....

"உள்ளூர் கலைஞர்களை ஊக்குவித்தலும் அவர்களுக்கான களம் அமைத்தலும்"

தொடர்பு : 021 222 6036

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஊடக அனுசரணை

தினமுரசு


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | காவியத் திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## 75 ஆவது அகவை பாராட்டு விழா

(கட்டைப்பிராய்)

கட்டைப்பிராயைச் சேர்ந்த ஓய்வு நிலை கிராம அலுவலர் லயன் சி. இலட்சுமிகாந்தனின் எழுபதாவது அகவையும், பாராட்டு விழாவும் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத் திருமண மண்டபத்தில் செங்குந்த இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.பத்மராஜா தலைமையில் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட ஆளுநர் டாக்டர் வை. தியாகராஜா, வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன், நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார், கிராம அலுவலர் சி.உதயகுமார், ஓய்வு நிலை அதிபர் கா.தவராசாவும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன் மேலும் சில பிரமுகர்களும் கலந்து கொண்டு பாராட்டுரைகளை வழங்கவுள்ளனர்.

வாழ்வாதார உதவிகளும் கல்வி ஊக்குவிப்பு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (08)

## ஊர்காவற்றுறை பிரதேசசபை

### வரவு-செலவுத் திட்டம் - 2015

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் 1987ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வரவு-செலவுத்திட்டத்தை 24.12.2014 ஆம் திகதியில் இருந்து 31.12.2014 ஆம் திகதி வரை சபையின் தலைமை அலுவலகம் மற்றும் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உப அலுவலகங்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

ஊர்காவற்றுறை
பிரதேசசபை,
ஊர்காவற்றுறை
24.12.2014

ம.ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

(C/3961)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2013

1. வணிக முதற் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக இரண்டாம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு - 2012 (புதிய பாடத்திட்டம்)

### மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

வணிக முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட தேர்வு-2011 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத்தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 16.01.2015 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா.500/- ஆகும். யாழ். பல்கலைக்கழத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/- க்கான காசுக்கட்டளை / தபால் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்,
23.12.2014

(C/3960)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1120 | திகதி 22.12.2014

வெற்றி எண்கள்: 40 41 49 59 | ஆங்கில எழுத்து: U

**ஜக்பொட் பரிசு ரூ. 4,79,24,220/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,79,24,220/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 251 | 1,000/= | ரூ. 2,51,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 469 | 1,000/= | ரூ. 4,69,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11301 | 60/= | ரூ. 6,78,060/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6031 | 40/= | ரூ. 2,41,240/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 149186 | 20/= | ரூ. 29,83,720/= |
| ஆங்கில எழுத்து | 21552 | 20/= | ரூ. 4,31,040/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 65,54,060/=

**எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 48,216,080/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.12.25 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3916)



**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

# தொடர்மழை நாச்சிக்குடாவில் 800 குடும்பங்கள் பாதிப்பு

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏ - 32 வீதி நாச்சிக்குடா சந்தியிலிருந்து நாச்சிக்குடா பகுதிக்கிடைப்பட்ட வீதி தொடர்ச்சியாக பெய்த கனமழையினால் வெள்ளநீர் தேங்கி போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்துக்கு பிரதான வீதியாகவுள்ள இவ் வீதியில் தேங்கியுள்ள வெள்ள நீரால் நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த 800 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக 100 குடும்பங்களின் வீடுகள் வெள்ளத்தால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும். குடிசை வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் நாச்சிக்குடா கிராம அபிவிருத்தி தலைவர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இவ் வீதி எவ்வித புனரமைப்புக்கும் உட்படாத நிலையில் மிக மோசமாக சேதமடைந்துள்ளதாகவும் இதனால் தற்போது பெய்துள்ள மழையால் வெள்ள நீர் வழிந்தோடமுடியாது வீதியில் தேங்கிக் காணப்படுவதுடன் குடியிருப் புகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாச்சிக்குடா மத்தி, நாச்சிக்குடா கிழக்கு, நாச்சிக்குடா தெற்கு கரடிக்குண்டு உள்ளிட்ட உள்ளக கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெற்குப் பகுதியில் 15 குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டநிலையில் இவர்களுக்கான சமைத்த உணவுகளை கிராம அலுவலரும் தெற்கு பகுதிக்கான ஈ.பி.டி.பி.அமைப்பாளரும் இணைந்து வழங்கி வருவதாக கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தெரிவித்துள்ளார். (36)



வலி.தெற்கு பிரதேச சபையும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய திறந்த வெளிப்போட்டியில் பல சாதனைகளைப் படைத்த மயிலணி ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் பாலச்சந்திர சர்மா அண்மையில் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (இ)

# 15 மாணவர்கள் சித்தி

பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலையிலிருந்து 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தேற்றிய 15 மாணவர்கள் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

பி.தனராஜ் (167 புள்ளிகள்), எஸ்.அரணீதரன் (168 புள்ளிகள்), எஸ்.அபிசன் (158 புள்ளிகள்), யோ.ஹஜாலினி (174 புள்ளிகள்), ஆர்.பிரவீனா (171 புள்ளிகள்), எஸ்.மோகனரூபி (157 புள்ளிகள்), ஏ.கவினஞ்ஞை (183 புள்ளிகள்), ரீ.டெறிக்ஸபனேசர் (177 புள்ளிகள்), ஜே.விஸ்ணுராஜ் (169 புள்ளிகள்), ஜே.துவாரகள் (153 புள்ளிகள்), ஜே.சஜிந்தன் (178 புள்ளிகள்), கே.அபிசன் (165 புள்ளிகள்), எம்.லக்ஷன் (170 புள்ளிகள்), எஸ்.நிறேகசாந் (154 புள்ளிகள்), ஏ.அஸ்மிகா (155 புள்ளிகள்). (01)

# மாலை நேர வகுப்பறை கட்டடத்துக்கு சந்திரகுமார் எம்.பி.நிதி ஒதுக்கீடு

ஜெயபுரம் வடக்கு, தெற்கு, சோலை பல்லவராயன் கட்டு பகுதியைச் சேர்ந்த ஜெயபுரம் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கோடு ஜெயபுரத்தில் மாலை நேர வகுப்பறைக்கட்டடம் அமைக்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் 425,000 ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளார்.

ஜெயபுரம் பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 9 முதல் உயர்தரம் வரையான மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வீட்டுக்கு வீடு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இந்த வகுப்பறைக் கட்டடத்தின் மூலம் 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடையவுள்ளதாகவும் 64 அடி நீளமும், 21 அடி அகலமும் கொண்ட இந்த வகுப்பறை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜெயபுரம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆர்.ராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்படுவதற்கு பெற்றோரும், கல்வி மான்களும் நன்றி தெரிவித்துள்ளதுடன் தமது பிள்ளைகளின் எதிர்கால கல்வி தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (36)

# அதிக விலையில் கொப்பி விற்பனை

வர்த்தக நிலையங்களில் 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் கொப்பி வடமராட்சி மந்திகை ஆதாரவைத்தியசாலையின் முன்பகுதியில் 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வறுமைக்குட்பட்ட நோயாளர்களே அரச வைத்தியசாலைக்கு நோயினால் பாதிக்கப்பட்டு அதிகம் வருகை தருகின்றனர். இவ்வாறு வருகை தருபவர்களிடம் 20 ரூபாவுக்கு கொப்பியை விற்பனை செய்தால் தாம் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த நடவடிக்கை தொடர்பில் அதிகாரிகள் கண்டும் காணாதது போல் இருப்பது மிகவும் வேதனையளிப்பதாக நோயாளி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். (150)

# தமிழர்களை ஏமாற்றி ஏமாற்றியே லாபம் பார்க்கும் வியாபாரிகள்....




யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை உண்டு. அதைப் பெரும்பாலான மக்கள் 'செத்த வீட்டுப் பேப்பர்' என்று சொல்வார்கள்.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அந்தப் பத்திரிகையில் மரண அறிவித்தல்கள் அதிகமாக வெளியாகும். அல்லது அந்தியேட்டி மற்றும் நினைவு நாள் அறிவிப்புகள் அதில் வரும். இது ஒரு காரணம்.

மற்றக் காரணம், அந்தப் பத்திரிகையில் வெளியாகும் செய்திகளும் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் உரைகளும் தமிழ் சமூகத்தை சாகடிக்கும் விதமாக இருக்கும். அந்தப் பத்திரிகையின் கடந்த காலச் செய்திகளையும் அதனுடைய ஆசிரிய நோக்கையும் யாராவது இப்பொழுது தொகுத்துப் பார்த்தால் இது இன்னும் துலக்கமாகத் தெரியும்.

அந்தளவுக்கு, தமிழ் சமூகத்தை மரணக் குழிக்குள் வீழ்த்தும் விதமாக அது செயற்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

2010 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 'இந்தா சரத் பொன்சேகா வெல்லப் போகிறார். அவருடைய அன்னப்பட்சிச் சின்னம் தமிழ் மக்களுக்கு அன்னத்தை அள்ளித்தரப் போகிறது. ஆகவே, உங்கள் வாக்குகளை அள்ளி அன்னச் சின்னத்துக்குப் போடுங்கள்' என்று சொல்லியது.

சரத் பொன்சேகா வெல்லப் போகிறார் என்ற ஆருடங்களையெல்லாம் செய்தது. கருத்துக் கணிப்புகளை நடத்துவதைப்போல நாடகமாடி தமிழ்ச் சனங்களை ஏமாற்றியது.

இறுதியில் சரத் பொன்சேகா தோற்றதும், மகிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றதும் வரலாறு.

இதைப்போல அது புலிகளுடைய போர் பற்றியும் பொய்யான கணிப்புகளையே சொன்னது.

'இந்தா பாருங்கள், இலங்கை இராணுவம் படுதோல்வியைச் சந்திக்கப்போகிறது. இலங்கை அரசாங்கம் படுவீழ்ச்சியின் விளிம்பில் நிற்கிறது. புலிகள் தனிநாட்டை அமைக்கப்போகிறார்கள்...' என்ற மாதிரி கள யதார்த்தம், உண்மை நிலவரம் என்பதையெல்லாம் ஆராயாமல் பிசப்பியது.

இறுதியில் என்ன நடந்தது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

இப்படித்தான் இந்தப் பத்திரிகை அரசு – புலிகள் பேச்சுவார்த்தையின் போதும் 'பச்சைப் புலுடா'க்களை அவிழ்த்துவிட்டது.

அப்பொழுது இந்தப் பத்திரிகையிலும் இதன் சகோதரப் பத்திரிகையிலும் இந்தப் பேச்சுவார்த்தையைப் பற்றியும், பேச்சுவார்த்தையின் போது நடந்தவைகளைப் பற்றியும் ஒரு தொடரையே எழுதி தமிழ் சனங்களை ஏமாற்றினார்கள்.

இறுதியில் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட பின்னடைவும், முறிவும் தமிழ் மக்களை எங்கே கொண்டுபோய் விட்டது என்பதை எல்லோரும் அறிவர்.

ஆனால், இந்தப் பத்திரிகையோ இன்னும் திருந்துகிற மாதிரி இல்லை.

கடந்த காலத்தில் தான் சொன்னவை அனைத்துமே பொய்த்துப்போய் – தன்னையே கேலி செய்கிறது என்பதை அது ஏற்கத் தயாரில்லை.

தான் பரப்பிய பொய்களால் தமிழ் சமூகத்திற்கு மிகவும் பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டன என்பதை உணர்ந்துகொள்ளவும் ஏற்கவும் கூட அது தயாரில்லை.

ஏனென்றால், இந்தப் பத்திரிகை தெரியாத்தனமாக பொய் சொல்லவில்லை.

நன்றாகத் தெரிந்தே திட்டமிட்டே பொய்யை சொல்கிறது.

ஏன் அப்படிப் பொய் சொல்லுகிறது என்றால், தன்னுடைய தனிப்பட்ட நலனுக்காகவே அப்படி பொய்யை சொல்லுகிறது.

அது எவ்வளவுக்கு எவ்வளவு பொய்யை சொல்லுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ் மக்களை ஏமாற்றுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதற்கு நன்மைகள் கிடைக்கும்.

கடந்த காலத்தில் அது அப்படித்தான் நன்மைகளைப் பெற்றது. லாபங்களை அனுபவித்தது. நிகழ்காலத்தில் இப்போதும் அப்படித்தான் பொய்யை விற்றுப் பிழைக்கிறது. எதிர்காலத்திலும் அது அப்படித்தான் செய்யப்போகிறது.

தமிழ் மக்களை எவரெல்லாம் ஏமாற்றுகிறார்களோ, தமிழ் சனங்களுக்கு எவரெல்லாம் கூசாமல் பொய்யை சொல்லுகிறார்களோ அவர்களெல்லாம் அதனால் லாபத்தை பெற்றவர்களே, இன்னும் லாபத்தைப் பெற்றுக் கொண்டிருப்பவர்களே!

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல. அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மற்றவர்களைப் போலில்லை மாவை

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுமென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை தேர்தலுக்கு இரண்டு நாட்கள் முந்தி அறிவிப்பதாக தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருக்கிறார்.

இது நமக்குக் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி 8ஆம் திகதி வரவிருக்கிறது. தமிழ்ப் பிரதேசமெங்கும் சாத்வீகப் போராட்டம் வெடிக்கும் என்று மாவையார் பல தடவைகள் உறுதிபட அறிவித்திருந்த திகதி ஜனவரி 1ஆம் திகதியாகும்.

உண்ணாவிரதப் ப்ந்தலில் இருந்தபடியேதான் எந்த வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்ற அறிவிப்பை வெளியிடப் போகிறாரா அல்லது ஜனாதிபதியை மாற்றிவிட்டால் தமிழ் மக்களுக்கான தீர்வை எடுப்பதற்கு அகிம்சைப் போராட்டம் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறாரா என்பதை மாவையார் எங்கும் தெளிவுபடுத்தவில்லை.

அல்லது வரப்போகும் ஜனாதிபதி யாரென்று பார்த்து அவருக்கும் ஒரு மூன்றுமாத காலக்கெடுவை வழங்கி அதன்பிறகு அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என்ற முடிவை அவர் எடுத்திருக்கிறாரா என்பது பற்றியும் தமிழ் மக்களுக்கு எதுவும் அறிவிக்கவில்லை.

தற்போதிருக்கும் அரசுக்கு மூன்று மாதக் காலக்கெடுவை வழங்கி, அதற்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை அரசு ஆரம்பிக்காவிட்டால் ஜனவரி 1ஆம் திகதி முதல் இறைமையுள்ள தமிழரசு காணும்வரையான சாத்வீகப் போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவோம் என மாவை அவர்கள் ஒன்றுக்குப் பலதடவைகள் வலியுறுத்தி முழங்கியிருந்தார்.

வவுனியா தமிழரசுக்கட்சி மாநாட்டில் ஆரம்பித்து தொடர்ச்சியாக ஒன்றரை மாதங்களுக்கு அவர் அகிம்சைப் போராட்டம் குறித்தபடி நடைபெறும் என்பதில் மாற்றமில்லை என திரும்பத் திரும்ப முழங்கி வந்த பத்திரிகை நறுக்குகளை நாம் சேமித்து வைத்திருக்கிறோம்.

ஏனெனில், பொதுவாக தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்களை உசுப்பேத்துவதற்காக முழங்குவார்களே தவிர, அறிவிக்கும் போராட்டங்களை வாக்குறுதிகளை சீரியஸாக நினைப்பதில்லை. ஏற்கனவே அறிவித்ததையெல்லாம் மறக்கப்பண்ணும் விதமாக வேறொரு ஆவேச முழக்கத்தை வெளியிட்டு மக்களைப் பேய்க்காட்டி விடுவார்கள் என்றொரு அபிப்பிராயம் பரவலாக உள்ளது.

அதுபோல, அவர்களது மாபெரும் அகிம்சைப் போராட்டம் என்பதே அதிகபட்சமாக ஒருநேர உண்ணாவிரதமாகவோ, பஸ் ஸ்ராண்டில் சிலமணிநேரத்திற்குப் பதாகைகளைப் பிடித்துக்கொண்டு நின்றுவிட்டுப் போவதாகவோதான் இருக்கும் என்றும் பலர் சொல்லிவருகிறார்கள்.

அதுதவிர, அரசுக்கு மீண்டும் மீண்டும் எச்சரிக்கைகளையும், "சர்வதேசம் பார்த்துக்கொண்டு இராது" போன்ற ஆவேச அறிக்கைகளையும், இருபத்தியோராவதாக வரப்போகிற தேர்தலிலும் தமிழ் மக்களின் ஒற்றுமையை இருபத்தியோராவது முறையாகவும் காட்டுவதுதான் அகிம்சைப்போராட்டமாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சிலர் நக்கலாகச் சொல்வதுண்டு.

ஆனால் மாவை அவர்கள் அகிம்சைப் போராட்டத்தை உறுதிபட அறிவித்த முறையும், அதன் சீரியஸ் தன்மையை உணர்த்தும் விதமாக அகிம்சாமூர்த்தி காந்தியாரின் குல்லாயை அணிந்துகொள்ள ஆரம்பித்ததும், மேற்கண்ட நையாண்டிக்காரர்களுக்கு அவரளித்த பதிலாகவே பார்க்க வைத்தது.

இலங்கையில் எந்த ஆட்சியாளர்களிடமும் தீர்வில்லை, இந்தியா உட்பட சர்வதேசமும் விளங்கிக்கொள்வதாக இல்லை என்கிற யதார்த்தத்தைத் தெளிவாக விளங்கி அறிவித்த பிறகே, தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்கள் ஒத்துழையாமை நடவடிக்கைகள் மூலம் 2015-ல் இப்பிரச்சினைக்கு ஒரு முடிவைக் கொண்டு வருவோம் என்று மாவை அறிவித்தார்.

ஜனாதிபதி மாற்றம், ஜெனீவாப் பிரேரணை என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்றிவிடக் கூடியவர் இல்லை மாவை என்பதே பலரதும் நம்பிக்கை.

- ஆசிரியர்

# 300 வாக்கெண்ணும் நிலையங்களுக்கே கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி

ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் எண்ணப்படவுள்ள 1115 நிலையங்களில் 300 நிலையங்களுக்கு மாத்திரமே தேர்தல் கண்காணிப்பாளர்கள் செல்வதற்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரினால் ஒதுக்கப்படவுள்ள 300 வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் தாம் எவற்றை கண்காணிப்பது என அனுமதிவழங்கப்பட்டுள்ள ஏழு கண்காணிப்புக் குழுக்களையும் தீர்மானிக்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் பிரச்சினைகள் எதுவும் இடம்பெறாததால் கண்காணிப்பாளர்கள் அவசியமில்லை என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு நிலையங்களில் தாங்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் 3000 பேரை ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளன. 1000 கண்காணிப்பாளர்களையும், 35 நடமாடும் குழுக்களையும் பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவித்துள்ள பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தேர்தல் மோசடிகள் இடம்பெறக்கூடிய பகுதிகள் என சிலவற்றை இனம் கண்டுள்ளதாகவும், இலங்கை போக்குவரத்துசபை, தொண்டர் படைப்பிரிவினர், பொலிஸ்நிலையங்கள், பிரதேச சபை மற்றும் கல்வித் திணைக்களங்கள் இவற்றுள் அடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிளி. டிப்போ சந்தியில் பசுமை நகரப் பூங்கா

கிளிநொச்சி டிப்போ சந்தியில் பசுமை நகரம் என்னும் பூங்கா 17 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலக திட்டமிடல் தகவல்கள் தெரிவிக்கின்றன. நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப் பூங்கா அமைக்கப்படுவதாக அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் அரியவகை மரங்களை நாட்டி நகரத்தின் பசுமையை பேணுதல், பொதுமக்கள் பொழுது போக்கக்கூடிய வகையிலான வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்டவை ஏற்படுத்தப்படவுள்ளன. இந்தத் திட்டம் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, பூநகரி பொதுச்சந்தை வளாகத்தில் பசுமையை அதிகரித்தல் என்னும் தொனிப்பொருளில் இயற்கை வளங்களை உருவாக்கும் செயற்றிட்டம் நகர அபிவிருத்தி திட்டமிடல் அதிகார சபையின் 6 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலக திட்டமிடல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பூநகரி உள்ளக வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பூநகரி மட்டுவில் நாடு கிழக்கு கிராமங்களின் உள்ளக வீதிகள் மிகமோசமாக சேதமடைந்துள்ளதால் இதனூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கறுத்தாப்பளை 4 ஆம் கட்டை மறவன்குறிச்சி உள்ளிட்ட உள்ளக கிராமங்களிலுள்ள சுமார் 5 கிலோமீற்றர் வீதி இவ்வாறு சேதமடைந்துள்ளதாகவும் இவ்வீதி குறித்த கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதியாக காணப்படுவதாகவும் மட்டுவில் நாடு கிராம மட்ட பிரதிநிதி தெரிவிக்கின்றார்.

இவ்வாறு இவ்வீதி சேதமடைந்துள்ளதால் தற்போது பெய்யும் மழையினால் வெள்ள நீர் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறாக அமைவதாக தெரிவிக்கும் மக்கள் இவ்வீதி புனரமைப்பு குறித்து உரிய அதிகாரிகளிடம் தெரியபடுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை இப்பிரதேசத்தை விட ஏனைய கிராம வீதிகள் ஓரளவு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இவ் உள்ளக வீதிகளையும் புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (36)

# வடக்கிலுள்ள இராணுவத்தினர் குறைக்கப்படமாட்டார்கள்

## கூறுகிறார் சம்பிக்க.

வடக்கில் இராணுவத்தினர் குறைக்கப்பட மாட்டார்கள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கின் இராணுவ முகாம்கள் ஐம்பது வீதத்தினால் குறைக்கப்படும் என அரசாங்கம் செய்து வரும் பிரசாரம் பிழையானது.

அரசாங்கம் எதிர்க்கட்சிகள் மீது பிழையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலோ உடன்படிக்கையிலோ 50 வீதம் இராணுவ முகாம்கள் வடக்கில் குறைக்கப்படும் என உறுதியளிக்கப்படவில்லை.

அரசாங்கம் பிழையானதும் பொய்யானதுமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பிட்டகோட்டே பொலிஸ் அரங்கில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் மைத்திரிபால சிறிசேன செய்து கொண்ட உடன்படிக்கையில் வடக்கில் 50 வீத இராணுவ முகாம்கள் குறைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 4 ஆயிரம் ஏக்கர் உவர் நிலங்களில் கிளிநொச்சியில் நெற் செய்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கும் 4 ஆயிரம் ஏக்கர் உவர் நிலங்களிலும் அதற்கேற்ற விதத்தில் தெரிவு செய்யப்பட்ட நெல்லினங்கள் விவசாயத் திணைக்களத்தால், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா, நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகத்தில் (பெரும்போகம் - மழை காலத்தில்) 59 ஆயிரம் ஏக்கர் தொடக்கம் 60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்யப்படுகிறது.

அத்துடன் குளங்களை நம்பி செய்கை பண்ணப்படும் சிறுபோகச் செய்கையில் 13 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவற்றைவிட 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உவர் தன்மை கொண்ட நிலமாக காணப்படுகின்றது. அவை அதிக உவர்த்தன்மை கொண்டவை மற்றும் சாதாரண உவர்த் தன்மை கொண்டவையென தொழில்நுட்ப ரீதியில் பிரிக்கப்பட்டு, அந்தந்த நிலங்களில் பயிரிடக்கூடிய நெல்லினங்களை விவசாயத் திணைக்களம் விவசாயிகளுக்கு வழங்கி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

# ஜாதிக ஹெல உறுமயவுடன் மைத்திரி ஒப்பந்தம்

## தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து

**"நான் இந்த முட்டாள் தனமான அமைப்பை வெறுக்கிறேன்! ஆனால் யாராவது நல்ல அர்த்தமுள்ள மாற்றத்தை கொண்டு வரும்வரை நான் அதனுடன் இணைந்திருக்கவே விரும்புகிறேன்"** - 1973இல் வெளியான மக்னம் போஸ் படத்தில் "டேட்டி ஹரி" கலகனாக தோன்றிய கிளின்ட் ஈஸ்ட்வூட் சொல்வது.

தற்போதைய ஆட்சியைப் பற்றி எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் விமர்சனங்களை நான் ஏற்றுக் கொள்வதுடன் சில விடயங்களில் அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு அப்பாலும் சென்றுள்ளேன். எனினும் அவைகள் மோசமான ஆட்சியைப் பற்றிய விமர்சனங்கள், மற்றும் அந்த விடயங்களைப் பொறுத்தவரை அவற்றுக்குத் துல்லியமான ஒரு தீர்வு தேவை. மோசமான ஆட்சியை நாட்டின் கட்டமைப்பு மற்றும் முறைமைகளுடனும் மற்றும் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுடனும் சேர்த்து குழப்பிக் கொள்ளக் கூடாது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவி வாய்ப்பை பெறுவதில் எனக்குப் பிரச்சினை எதுவும் இல்லை, என்றாலும் எனது பிரச்சினை எதிர்க்கட்சிகளின் திட்டம் பற்றியது, அது வெறுமனே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல - அது எனக்கும் சம்மதம் - ஆனால் 100 நாள் ஒழிப்புத் திட்டம் என்கிற அரசியலமைப்பு அதிர்ச்சி வைத்தியம் மூலம் அரசாங்கத்தின் மையப்பகுதியை பலவீனப் படுத்துகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் நவீன புரட்சி அரசாங்கத்தின் அமைப்பு, அரசாங்கத்தினை உருவாக்குதல் என்கிற களத்துடன் நிலைகொண்டிருந்தது - தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கான மாற்றம். அடிப்படையில் அதை மாற்றுவதோ அல்லது எதிர்மறையாக்குவதோ தேவை என்று நான் நினைக்கவில்லை.

ஐநா பாதுகாப்புச் சபையில் உள்ள ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளில் மிகவும் மாறுபட்ட நான்கு நாடுகளான அமெரிக்கா, ருஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளில் நிறைவேற்று ஜனாதிபதி முறையே உள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் மட்டும் அது இல்லை.

வளரும் சக்திமிக்க நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட பிறிக்ஸ் அமைப்பில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள பிரேசில், ருஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகளில் ஜனாதிபதி முறையே உள்ளது.

ஆகவே நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் அவசியமும் மேலும் குறைந்தது நூறு நாட்களுக்குள் அதை இல்லாதொழிப்பது என்பதையும் அல்லது அந்த முறை நாடாளுமன்ற அரசாங்க முறைக்கு உள்ளார்ந்த அளவில் குறைவாக உள்ளது என்பதையும் என்னால் முற்றாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நிச்சயமாக அது மறுசீரமைக்கப்பட வேண்டும்.

செயற்பாடுகளில் தேக்கம் மற்றும் பலவீனமான நிலை ஏற்படுவதை தடுக்க மறுசீரமைப்புகள் அவசியம். மறுசீரமைப்புகள் அரச அமைப்புகளை குலைக்கவோ அல்லது நிலையற்ற தாக்கவோ கூடாது. மிகையில் கொபர்ச்சேவின் கிளாஸ்நொஸ்ட் மற்றும் பெரஸ்ரோரிக்கா போன்ற திட்டங்களை நான் ஆதரிக்கின்றேன் ஆனால் அவற்றை திறனாய்வின்றி அதீத நம்பிக்கையுடன் கூடிய உற்சாகத்துடன் செய்வது வருந்தத்தக்கது. அது பெரிய தவறு.

பிடல் காஸ்ட்ரோ மிகவும் எச்சரிக்கை மற்றும் தெளிந்த தொலைநோக்கம் என்பனவற்றுடன் செயற்பட்டார். பழமையான மந்த சோவியத் சோஷலிசத்தின் கடும் விமர்சகராக இருந்த அதேவேளை 1987க்கு வெகு காலத்துக்கு முன்னரே "ஒருநாள் நாம் தூக்கத்திலிருந்து விழிக்கும்போது சோவியத் ஒன்றியம் இல்லாமல் போயிருப்பதைக் காண்போம்" என அவர் எச்சரிக்கை செய்திருந்தார்.

கோபர்ச்சேவ் அவரது விமர்சனங்களைப் பொறுத்த வரையிலும் மற்றும் மறுசீரமைப்பு செய்வதில் அவர் காட்டிய வைராக்கியமும் சரியானதுதான், ஆனால் மறுசீரமைப்புகள் நடவடிக்கைகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை, அது அவரது கைகளிலிருந்து நழுவி போரிஸ் யெல்ட்சின் மற்றும் அவரது தீவிர மறுசீரமைப்பாளர்களினது 500 நாள் அதிர்ச்சி வைத்திய திட்டத்தின் மூலம் கடத்தப்பட்டு விட்டது, சோவியத் ஒன்றியத்தின் சிதைவை இறுதியில் அவரால் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

"20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய பூகோள மூலோபாய சோகம்" என புட்டின் அதை சரியாகக் குறிப்பிட்டிருந்தார். ருஷ்யாவின் சுய மரியாதையை மீட்பதற்காக புட்டின் மற்றும் அவரது சக்திவாய்ந்த ஜனாதிபதித்துவம் என்பன சில அந்தஸ்தான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மைத்திரிபால சிறிசேன ஒரு மிகையில் கோபர்ச்சேவ் ஆகக்கூடாது மற்றும் ரணில் மற்றும் சந்திரிகா ஆகியோரை யெல்ட்சினின் பாத்திரத்தை ஏற்க அனுமதிக்கக் கூடாது. திரு. சிறிசேன ஒரு முன்னாள் மாவோயிஸ்ட். அதனால் ஒரு டெங் ஹசியொ பெங் போல மாறுவதற்கு பதிலாக அமைப்புக்கு பங்கம் ஏற்படாமல் மறுசீரமைப்புகள் செய்து, அரச அமைப்பின் மையத்தை இன்னும் குறைவான வழியில் மாற்றியமைக்க வேண்டும்.


நாட்டுக்குத் தேவையானது என்னவென்றால் மாற்றம் மற்றும் தொடர்ச்சி என்பனவற்றின் சரியான கலவையே. மாற்றம் இல்லாத தொடர்ச்சியை மட்டும் மகிந்த பிரதிநிதித்துவம் செய்யும் அதே வேளை, சந்திரிகா - ரணில் - மங்கள - ராஜித குழு பிரதிநிதிப்படுத்துவது என்னவென்றால் தொடர்ச்சியில்லாத மாற்றத்தை. இரண்டு வித தீவிரமும் சமமான ஆபத்தையே கொண்டுள்ளன.

இந்த இடத்தில்தான் ஜாதிக ஹெல உறுமய ஒரு சமப்படுத்தும் காரணியாக உள் நுழைகிறது, ஜாதிக ஹெல உறுமய உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள முக்கியமான அம்சங்கள் பின்வருவனவாகும்:

உட்பிரிவு 1 - நிறைவேற்று அதிகாரங்கள், நல்லாட்சி மற்றும் தேர்தல் அமைப்பு தொடர்பான அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தேவை எனக் கருதப்படுகிறது.

**மைத்திரிபால நிச்சயமாக ஒரு டெங் ஹசியோ பெங்கே (Deng Hsiao Peng) தவிர ஒரு மிகைல் கோபர்ச்சேவ் (Mikhail Gorbachev) அல்ல**

உட்பிரிவு 2 - தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றுக்கு ஆபத்து இல்லாத வகையில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உள்ள ராட்சச அதிகாரத்தை இல்லாதொழித்தல். நிலையான அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் விதமாக தொகுதி முறை மற்றும் விகிதாசார முறை பிரதிநிதித்துவ



அம்சங்களைக் கொண்ட ஒரு தேர்தல் முறையை அறிமுகப்படுத்துதல்.

உட்பிரிவு 6 - சர்வதேச நீதிமன்றங்களில் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக இராணுவ தளபதி மற்றும் ஏனைய இராணுவ தலைவர்கள் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிரான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதாக்குவதாகச் சொல்லப்படவில்லை, ஆனால் "நிறைவேற்று அதிகாரங்கள் தொடர்பான அரசியலமைப்பு சீர்திருத்தம்" எனச் சொல்லப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழி சர்வ அதிகாரங்களைக் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் அதன் அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் விலக்கிக் கொள்வதாகச் சொல்லவில்லை, ஆனால் அதன் ராட்சத பலம் கொண்ட அதிகாரங்களை இல்லாதொழிப்பதாகவே சொல்கிறது, அதாவது ஆபத்தான அதிகப்படி அதிகாரங்கள் நீக்கப்படும்.

"தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றுக்கு ஆபத்து இல்லாத வகையில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உள்ள ராட்சத அதிகாரத்தை இல்லாதொழித்தல்"

பல வருடங்களுக்கு முன்னரே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக் காலத்தின் போது இந்த நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்கும் கோஷத்தை முன்னெடுத்திருந்தார். சந்திரிகாவின் நோக்கம் தெளிவாக இருந்தது: தேசிய விவகாரங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்று அவரை தொடர்ந்து அரசியலில் இருக்க அனுமதிப்பது என்பதுதான் அது.

அரசியலமைப்பு ரீதியில் இது சாத்தியமற்றது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஏனென்றால் சந்திரிகாவால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. இதன்படி அதை சமப்படுத்தும் தீர்மானம் ஒன்றை அவர்கள் முன்மொழிந்தார்கள் - ஒரு மேலதிக அரசியல் வழிமுறையூடாக வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற முறைக்குத் திரும்புவது இதன்படி மட்டுப்படுத்தப்பட்ட தவணைகள் இல்லாமல் சந்திரிகாவால் அவரது தாயாரைப்போல எத்தனை முறை வேண்டுமானாலும் பிரதமராக வர முடியும்.

இந்த அரசியலமைப்பு புரட்சியை செயற்படுத்த சந்திரிகாவுக்கு அந்த நேரம் எல்.ரீ.ரீ.ஈ யின் பிரதிநிதிகள் போலச் செயற்பட்ட ரி.என்.ஏ யின் ஆதரவு தேவையாக இருந்தது, அதற்காக அவர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி வெருகல் ஆற்றங்கரையில் நிலைகொண்டிருந்த எல்.ரீ.ரீ.ஈக்கு எதிராக கிளர்ச்சி மேற்கொண்டிருந்த கருணாவின் படைகளை அழிக்க ஆச்சரியமான கடல்வழி இறங்கலை மேற்கொள்ள பிரபாகரனின் போராளிகளுக்கு அனுமதி வழங்கினார்.

**அவரது அரசியலமைப்பு புரட்சியை செயற்படுத்த சந்திரிகாவுக்கு அந்த நேரம் எல்.ரீ.ரீ.ஈ யின் பிரதிநிதிகள் போலச் செயற்பட்ட ரி.என்.ஏ யின் ஆதரவு தேவையாக இருந்தது, அதற்காக அவர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி வெருகல் ஆற்றங்கரையில் நிலைகொண்டிருந்த எல். ரீ.ரீ.ஈக்கு எதிராக கிளர்ச்சி மேற்கொண்டிருந்த கருணாவின் படைகளை அழிக்க ஆச்சரியமான கடல்வழி இறங்கலை மேற்கொள்ள பிரபாகரனின் போராளிகளுக்கு அனுமதி வழங்கினார்.**

ஜாதிக ஹெல உறுமய அத்தகைய நோக்கங்களினால் கறை படிந்த ஒன்றல்ல. ரணில் மற்றும் சந்திரிகாவை போலல்லாது அது தொடர்ச்சியாக எல்.ரீ.ரீ.ஈக்கு எதிரான முகாமிலேயே இருந்து வந்துள்ளது, அது தேசியவாத மற்றும் பாதுகாப்பு உணர்வுகளைக் கொண்டது.

அது சுது நெலும் - யுத்த நிறுத்த ஒப்பந்தம் - இடைக்கால சுயாட்சி அதிகாரம் - சுனாமிக்குப் பின்னான நிருவாகக் கட்டமைப்பு செயற்பாடு - போன்ற மூலகங்களின் தொடர்புகள் கொண்ட ரணில் மற்றும் சந்திரிகா ஆகியோரைப் போலல்லாது, சம்பிக்க ரணவக்க மற்றும் அத்துரிலிய ரத்தன தேரோ போன்ற திறமையும் பொறுப்புணர்வும் மிக்க அரசியல் மூளைகளின் அமைப்பைக் கொண்டுள்ளது.

# மைத்திரியின் உள்ளக விசாரணைக்குழு தூரநோக்குடன் பலவிளைவுகளைத் தரும்

## எச்சரிக்கிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

**அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடாவிட்டாலும், இலங்கைக்கு ஆபத்து உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.** — — — — — — — — — — —

எதிரணியின் பொதுவேட்பாளர், மைத்திரிபால சிறிசேன, போர்க்குற்றச்சாட்டுகள் அவற்றுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துகளுக்கு விளக்கம் கோரி இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஆயுதப் படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உள்ளக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படும் என்ற தனது நோக்கை பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தூரநோக்குடனான பல விளைவுகளை உள்ளடக்கியதாகும்.

இந்த விசாரணையின் தன்மை பற்றி எதிரணி வேட்பாளர் விளக்க வேண்டும். இந்த விசாரணைக் குழுவின் அதிகாரங்கள், நோக்கம் குறித்து வெளிப்படுத்த வேண்டும்.

ஆயுதப் படையின்ரை விசாரணைக்கு அழைக்கும் அதிகாரம் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும.

இலங்கைக்கு எதிரான அனைத்துலக விசாரணையை அணுகும் விடயத்தில் முழுமையான, மாற்றமான ஓர் அணுகு



முறை கையாளப்படும் என்று எதிரணி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சரணடையும் கோரிக்கைகள் தொடர்பாகவும் எதிரணியின் வேட்பாளர் விளக்கமளிக்க வேண்டும்.

உலகளாவிய ரீதியில் இந்தக் கோரிக்கைகள் ஏற்கக் கூடியவை அல்ல என நிரூபிக்கப்பட்டுள்ளது.

சீனா, இந்தியா, ரஷ்யா, ஜப்பான் மற்றும் அரபுலகம், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள நாடுகளின் பெரும்பாலான நாடுகளும் இந்த தீர்மானத்தில் இடம்பெற்றுள்ள நெருக்கடியான விடயங்களுக்கு ஆதரவு வழங்க மறுத்துள்ளன.

இந்த விடயத்தில் குறுகிய அரசியல் இலாபம் தேடும் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடு தொடர்பாக அறியும் உரிமை நாட்டுக்கு உண்டு.

ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடாததால் எமக்கு ஆபத்து இல்லை என அவர் தவறான கருத்தைக் கொண்டுள்ளார்.

ஆனால், இந்தப் பிரகடனத்தில் கையெழுத்திடாத நாடுகளும், பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன என்பது, அண்மைய அனுபவமாக உள்ளது. என்றும் அமைச்சர் பீரிஸ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மைத்திரி வென்றால் ஜனவரி 13 இல் விடுமுறை



ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவார் எனவும் இதனையடுத்து புனித பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்யும் ஜனவரி 13 ஆம் திகதி பொது விடுமுறை வழங்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அத்துடன் ஜனவரி 14 ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடலில் நடைபெறும் பிரதான திருப்பலி பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்காக நாடு முழுவதிலும் இருந்து இலவசமாக பஸ் சேவை நடாத்தப்படும் எனவும் ஜோன் அமரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மதவாதத்தை தூண்டுவோருக்கு தண்டனை விதிப்பதில்லை அரசு

## இப்போது கூறுகிறார் ரிசாத்



(கொழும்பு)

மதவாதத்தை தூண்டும் நபர்களுக்கு அரசாங்கம் தண்டனை விதிப்பதில்லை என அமைச்சர் ரிசாட் பதியுதின் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மதவாதத்தை தூண்டி குழப்பங்களை விளைவிக்கும் தரப்பினர் பற்றி அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்தாலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கைத்தொழில் வர்த்தக அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்யும் கடிதத்தை ஜனாதிபதி மகிந்தவிற்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு கோரிய போதிலும் அது நடக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனவே, மைத்திரிபால சிறிசேனவை வெற்றியீட்டச் செய்ய தமது கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# போதைவஸ்து கடத்தல் காரர்களை அறியாமலிருக்க நாமல் பேபியா?

## கேட்கிறார் ஹிருனிகா

(கொழும்பு)

நாட்டு மக்களே போதைவஸ்துக்காரர்கள் தொடர்பாக அறிந்திருக்கும் போது, அதனைப பற்றி அறியாதிருக்க நாமல் என்ன சின்னக்குழந்தையா? என்று மேல்மாகாண சபை உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் போதைவஸ்து கடத்தல்காரர்கள், யார் என்று தெரியும்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் போதைவஸ்து கடத்தல்காரர்கள் யார் என்று தெரியும்.

எனினும் ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்சவுக்கு மாத்திரம் அது தெரிந்திருக்கவில்லை. தாம் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கப் போவதாக தெரிந்த நிலையில் நாமல் ராஜபக்ச என்னையும் எனது தாயாரையும் சந்தித்திருந்தார்.

இதன்போது எனது தாயார் போதைவஸ்து கடத்தல்காரர்கள் யார் என்று நாமல் ராஜபக்ஷவிடம் கேட்டபோது அது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என்று நாமல் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களே போதை வஸதுக்காரர்கள் தொடர்பில் அறிந்து வைத்திருக்கையில்,



அதனைப் பற்றி அறியாதிருக்க நாமல் சின்னக் குழந்தையா? என்று ஹிருணிகா கேள்வி எழுப்பினார்.

# அரசாங்கத்தின் அத்துமீறல்களை தேர்தல்கள் ஆணையாளர் தடுப்பதில்லை

## குற்றம் சாட்டும் அத்துரலிய

(கொழும்பு)

அரசாங்க ஊடகங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்காக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை தடுப்பதில் இருந்து தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தவறியுள்ளார் என்று மீண்டும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக்குழு தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் இந்தக் குற்றச் சாட்டை செய்தியாளர் சந்திப்பின் போது சுமத்தி யுள்ளார்.

மஹிந்த ராஜபக்சவுக்காக அரச சொத்துக்கள் வீணடிக்கப்படுகின்றன. கட்டடங்கள், வாகனங்கள் என்று பல்வேறு சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. படையி



னரும் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஏற்கனவே படையினர் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் பொலிஸ் நிலையங்கள் அரசியல் அலுவலகங்களாக மாறியுள்ளன என்று தேரர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தநிலையில் இவற்றை கட்டுக்குள் கொண்டு வருவதில் தேர்தல்கள் ஆணையாளர் இயலாதவராக உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

# இராணுவம் இழிவுபடுத்தப்படுகிறதா? முற்றாக மறுக்கிறார் கோத்தா

(கொழும்பு)

அரசாங்கம் இராணுவத்தை இழிவுபடுத்துவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். கதிர்காமம் வெடிஹிட்டி கந்த விஹாரையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவப் படையினரைக் கொண்டு கானகள் வெட்டப்படுவதாகவும், சாப்பாட்டுத் தட்டுகள் கழுவப்படுவதாகவும் சிலர் குற்றம் சுமத்துகின்றனர். எனினும், படையினரை இழிவுபடுத்தும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையையும அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

அனுராதபுரம், பொலன றுவை மற்றும் திருகோண மலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படையினரே உதவிகளை வழங்கி வரு கின்றனர். குறித்த மக்களின் உயிர்களை படையினர் மீட்கின்றனர்.

பொலனறுவையில் 14 பாடசாலைகளை படையினர் நிர்மாணித்துள்ளனர், இதனால் அரசாங்கத்திற்கு பாரியளவு செலவு குறைக்கப்பட்டுள்ளது. போரின் பின்னர் 10,000 படையினர் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் மேசன்கள், இலக்ட்ரிசியன்ஸ், தச்சர்கள் உள்ளிட்ட பலரும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

போரின் பின்னர் 25000 இராணுவப்படையினர் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பல்வேறு வெளிநாட்டு சக்திகள் தொடர்ந்தும் நாட்டுக்கு எதிராக சதித் திட்டம் முன்னெடுத்து வருகின்றன. போர் முடிவுக்குக்



கொண்டு வரப்பட்டாலும் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்ய படையினரின் ஒத்துழைப்பு அவசியமானது.

மீட்கப்பட்ட வடக்கு கிழக்கின் பாதுகாப்பை உறுதி செய்ய தொடர்ந்தும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய அனர்த்தங்களின் போதும படையினர் முக்கிய பங்களிப்பினை வழங்கி வருகின்றனர் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்

# 50 ஆயிரம் மோ.சைக்கிள் பொலிஸாருக்கும் கிடைக்கும்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்னவின் கையெழுத்தோடு, சகல பொலிஸ் நிலையங்களுக்கும்



நேற்று முன்தினம் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# ஆன்மீகத்தில் நாட்டமுடையவர்களாக இளம் தலைமுறையினர் வளர்க்கப்படவேண்டும்

## சைவமகாசபையின் பொதுச் செயலாளர் நந்தகுமார் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

இளைய தலைமுறையை ஆன்மீகத்தில் நாட்டமுடையவர்களாக வளர்த்தெடுப்பதன் மூலமே எதிர்காலச் சந்ததியை சிறப்பாக கட்டியெழுப்ப முடியும் என்று தெரிவித்துள்ள சைவ மகா சபை, இவ்வாறான ஆன்மீகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

இளையோரிடையே ஆன்மீகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும் எமது சைவ சமயத்தின் பெருமைகளை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டும் தாங்கள் வருடாந்தம் திருவெம்பாவை காலத்தில் முன்னெடுத்து வருகின்ற ஆன்மீக, சமுதாயப் பணிகள் இந்த வருடமும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக சைவ மகா சபை யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடாத்தியிருந்தது.

இந்தச் சந்திப்பில் சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் ப.நந்தகுமார் கருத்துரை வழங்கினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்ச் சமூகம் தற்போது கலாசார சீரழிவுகளை நோக்கித் தள்ளப்பட்டுள்ளது. எமது எதிர்காலச் சந்ததியை இவ்வாறான பிறழ்வுகளில் இருந்து மீட்பதற்கு தற்போதுள்ள ஒரே வழி ஆன்மீகம் மட்டுமே.

இதனால் சைவ மகா சபை பல்வேறு ஆன்மீக, சமுதாய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக, வருடந்தோறும் திருவெம்பாவைக் காலத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இந்த வருடமும் தொடரவுள்ளது என அவர் தெரிவித்தார். (25)

### தொலைக்காட்சிப் பெட்டி

(வேலணை)

வேலணை பிரதேச செயலகத்துக்கு தினமும் வருகை தரும் மக்களின் நன்மை கருதி செயலக மண்டபத்தில் தொலைக்காட்சிப் பெட்டியொன்று வைக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைக்காட்சிப் பெட்டியில் பிரதேச செயலகத்தில் இடம் பெறுகின்ற நிகழ்வுகளும் மற்றும் ஏனைய மக்களுக்கு பயன்படக்கூடிய விடயங்களும் காட்சிப்படுத்தப்படுகின்றன.



யாழ். பொலிஸ் நிலையத்தினால் முஸ்லிம் கல்லூரி வீதியில் இயங்கும் பொலிஸ் நடமாடும் முகாமில் நடமாடும் சேவை அண்மையில் இடம்பெற்றது. இதில் பிறப்பு, இறப்பு பதிவுகள் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுவதைக் காணலாம். (105)

## மாணவர் அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

1 - 5 வயதுக்கு இடைப்பட்ட பாலர்களுக்கான சிறுவர் பாடசாலைதின பராமரிப்புச் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை இச்சேவை நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் இல.40 வைமன் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உப அஞ்சல் அலுவலகங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வரணி உபஅஞ்சல் அலுவலகங்களுக்கு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்களுக்கான வாக்காளர் அட்டைகள் தபாலகங்களில் தரம் பிரிக்கப்பட்டு ஒரிரு நாட்களில் வழங்கப்படவுள்ளதால் அதற்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களின் போதும் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (150)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு 18.12.2014

நாளைய தினமுரசு வாரமலரில்...




- ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்வார்கள் வெற்றிக்குப் பின் என்ன செய்வார்கள்?
- சித்திரவதைகளும் மனித உரிமைகளும் — சர்வதேச விவகாரம்
- ஒழிக்கப்படுமா ஜனாதிபதி ஆட்சிமுறை?
- பேராசிரியர் கைலாசபதியின் பார்வையில் உயலகமயமாக்கலின் ஊடுருவலும் இனப்பிரச்சினையும்



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

என்றென்றும் வாழ்க

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# வீரர்களுக்கான புதிய ஒப்பந்தம் 'ஏ' தரத்தில் புவனேஸ்வர் குமார்

## கழற்றிவிடப்பட்ட யுவராஜ், கம்பீர்



இந்திய கிரிக்கெட் சபை வீரர்களுக்கான புதிய ஒப்பந்தப் பட்டியலை வெளியிட்டது. இதில் புவனேஸ்வர் குமார் 'ஏ' தரத்துக்கு முன்னேறினார். அத்துடன் கௌதம் கம்பீர், யுவராஜ் சிங் ஆகியோர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர்.

உலகக்கிண்ண அணிக்குத் தேர்வானோரேஇந்தப் புதிய பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். ஒப்பந்த விபரம் வருமாறு: தரம் 'ஏ' - (வருட சம்பளம்: ஒரு கோடி இந்திய ரூபா - இலங்கை மதிப்பில் சுமார் 2 கோடியே 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா) வீரர்கள்: எம்.எஸ். டோனி, ஹோலி, சுரேஷ் ரெய்னா, ஆர். அஷ்வின், புவனேஷ்வர் குமார், தரம் பி (வருட சம்பளம் 50 இலட்சம் இந்திய ரூபா, இலங்கை மதிப்பில் சுமார் ஒரு கோடியே 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா) பிராக்ஜன் ஒஜா, முரளி விஜய், சத்தீஸ்வர் புஜாரா, ரவீந்திர ஜடேஜா, இசாந்த் சர்மா, தவான், உமேஸ் யாதவ், ரோகித் சர்மா, அஜிங்ய ரஹானே, அம்பதி ராயுடு, மொஹமட் சமி (வெளியே:- கௌதம் கம்பீர், யுவராஜ்) சிங் தரம் 'சி' - (வருட சம்பளம் 25 இலட்சம் இந்திய ரூபா - இலங்கை மதிப்பில் சுமார் 50 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா) வீரர்கள்: அமித் மிஸ்ரா, வருண் ஆரோன், விரித்தி மன் சகா, ஸ்ருவர்ட் பின்னி, பங்கஜ் சிங், வினய் குமார், மோகித் சர்மா, தவால் குல்கர்னி, பர்வேஸ் ரசூல், அக்சர் பட் டேல், மனோஜ் திவாரி, ரொபின் உத்தப்பா, கரன் சர்மா, சஞ்சு சாம்சன், குல்டீப் யாதவ், கே.எல்.ராகுல் உள்ளே: வருண் ஆரோன், ஸ்ருவர்ட் பின்னி, பங்கஜ் சிங், வால் குல்கர்னி, பர்வேஸ் ரசூல், அக்சர் பட்டேல், மனோஜ் திவாரி, ரொபின் உத்தப்பா, கர்ன் சர்மா, சஞ்சு சாம்சன், குல்டீப் யாதவ், கே.எல். ராகுல் (வெளியே: டினேஸ் கார்த்திக், ஜாதவ் உனாட்கட்.)



# உடை மாற்றும் அறையில் ஹோலி - தவான் மோதல்

(புதுடில்லி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியின்போது, உடைமாற்றும் அறையில் இந்திய வீரர்கள் விராத் ஹோலி, தவான் இடையே வார்த்தைப் போர் ஏற்பட்டது தெரிய வந்துள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற்ற இரண்டாவது போட்டியின், நான்காவது நாள் ஆட்டத்தில் இந்திய அணியில் பல்வேறு குளறுபடிகள் ஏற்பட்டன. பயிற்சியில் ஈடுபட்ட தவானுக்கு காயம் ஏற்பட்டதால், இரண்டாவது இனிங்சில் அவசரம் அவசரமாக ஹோலி களமிறக்கப்பட்டார். இதனால் இவர் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இந்நிலையில், அன்றைய நாள் உடைமாற்றும் அறையில ஹோலிக்கும், தவானுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜோன்சன் பந்தில் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்த ஹோலி கோபத்துடன் உடைமாற்றும் அறைக்குச் சென்றுள்ளார். நான் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்ததற்கு நீங்கள்தான் காரணம் என தவானை நோக்கி குற்றம் சாட்டியுள்ளார். இதற்கு தவானும் பதிலடி தந்துள்ளார். அதாவது, இந்திய அணிக்காக விளையாடுவதை பெருமையாக கருதுகிறேன். எனக்கு காயம் ஏற்பட்டுள்ளது என பொய்யாக சொல்லவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இப்படி வார்த்தைப் போர் அதிகமானவுடன், இந்திய அணி இயக்குனர் ரவி சாஸ்திரி இருவரையும் சமாதானம் செய்துள்ளார்.

# எதிரணியை அச்சுறுத்த உளவியல் போர் அவசியம்



எதிரணியை அச்சுறுத்த உளவியல் ரீதியான போர்முறை அவசியமானது என்று அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன் கூறியுள்ளார்.

"மிட்சல் ஜோன்சன்: பவுன்சிங் பேக்" என்கிற புதிய டிவிடியில் வேகப்பந்து வீச்சின் உத்திகள் பற்றி ஜோன்சன் விளக்கியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: சிலநேரங்களில் ஆடுகளங்களில் மோசமாகப் பேசிவிடுகிறோம்.

சிலநேரங்களில் நாம் பேசுவது துடுப்பாட்ட வீரர்களிடையே சிறிது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.


அவர்களுடைய கால்நகர்த்தல்களைப் பற்றி யோசிக்கவைக்கிறோம், அல்லது ஷொர்ட் பந்து வீசுவதை அவர்கள் அறியும்படி செய்கிறோம். இவை எல்லாமே மன-உறுதியை தீர்மானிக்கும் விளையாட்டு.

சிலநேரங்களில் தொலைக்காட்சியில் பார்க்கும்போது ஒருவருக்கொருவர் கடுமையாக மோதிக்கொள்வதுபோல தோன்றும். ஆனால் நாங்கள் நடத்தை விதிமுறைகளுக்கு உட்பட்டே இருக்க விரும்புகிறோம்.

சிலநேரம், துடுப்பாட்ட வீரரிடம், உன் கால்கள் எங்கும் நகரவில்லை என்று கூறுவதன் மூலம் அதைப் பற்றி யோசிக்க வைக்கமுடியும். பின் அவர்களை நோக்கி பவுன்சர் வீசுங்கள்.

அப்போது அவர் உங்களைப் பற்றித்தான் நினைப்பார். இந்த விளையாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். இது ஒரு போதும் நிற்காது என்று எண்ணுகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டும் மலிங்க





(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதற்கு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். இதன் காரணமாக கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து சர்வதேச அணியில் இடம் பெறாமல் இருந்தார்.

தற்போது இலங்கை அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த அணி இரண்டு டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

ஒருநாள் தொடரின் கடைசி இரண்டு போட்டிகளில் லசித் மலிங்க விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருநாள் போட்டித் தொடர் ஜனவரி மாதம் 11ஆம் திகதி தொடங்கி 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



# விளக்கம் கோரல்

(கராச்சி)

பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான அப்ரிடி, முகமது இர்பான், வகாப் ரியாஸ், அன்வர்அலி, பஹத் ஆலம் ஆகிய 5 வீரர்கள் அந்நாட்டு கிரிக்கெட் சபையின் அனுமதி பெறாமல் விளம்பரம் ஒன்றில் நடித்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அப்ரிடி உட்பட 5 வீரர்கள் மீது விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. 1 வாரத்துக்குள் அவர்கள் விளக்கம் அளிக்குமாறு அந்த நோட்டீசில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விளக்கம் அளிக்காவிட்டால் 5 வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஜடேஜாவிற்குப் பதில் அக்சர்



அவுஸ்ரேலியாவுக்கு எதிராக விளையாடும் இந்திய டெஸ்ட் அணியில் இடம் பெற்றுள்ள ரவீந்திர ஜடேஜா பயிற்சியில் ஈடுபட்ட போது காயமடைந்தார்.

பரிசோதனை செய்து பார்த்ததில் காயம் பலமாக இருப்பது தெரிந்ததால் அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் அவர் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அவருக்குப் பதிலாக அடுத்த இரண்டு போட்டிக்கான இந்திய அணியில் அக்சர் படேல் இடம்பெறுவார் என பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

அக்சர் படேலும் ஜடேஜாவைப்போலவே இடது கை சுழற்பந்து வீச்சாளர் என்பதாலும், அவரைப் போலவே துடுப்பாட்டத்திலும் சிறப்பாக செயற்படுவார் என்று கருதியும் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## அடுத்தடுத்து சதம் யுவராஜ்சிங் அதிரடி

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியிலிருந்து கழற்றி விடப்பட்ட யுவராஜ், ரஞ்சி கிண்ணப் போட்டியில் அடுத்தடுத்து 2 சதங்கள் விளாசி மிரட்டியுள்ளார்.

தற்போது உள்நாட்டு டெஸ்ட் தொடரான ரஞ்சி கிண்ணப் போட்டியில் பஞ்சாப் அணிக்காக யுவராஜ் விளையாடி வருகிறார்.

ஹரியானாவுக்கு எதிரான ஆட்டத்தில் முதல் இனிங்ஸில் 59 ஓட்டங்கள் எடுத்த யுவராஜ், இரண்டாவது இனிங்ஸில் 160 பந்துகளில் 130 ஓட்டங்களை குவித்தார். இதில் 14 பவுண்டரிகளும், 5 சிக்சர்களும் அடங்கும்.

அதேபோல நேற்று பலம் வாய்ந்த மகாராஷ்டிரா அணிக்கு எதிரான போட்டியிலும் யுவராஜ்சிங் சதம் அடித்துள்ளார். தேனீர் இடைவேளையின்போது யுவராஜ் சிங் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் அடுத்தடுத்த போட்டிகளில் யுவராஜ் சதம் எடுத்து அசத்தியுள்ளார்.

இந்த ஆண்டு நடைபெற்ற ருவெண்ரி-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கைக்கு எதிராக ஆடிய பிறகு யுவராஜ்சிங்கிற்கு இந்திய அணியில் இடம் கிடைக்கவில்லை.

இதன் இறுதிப்போட்டியில் . மிகவும் மோசமாக ஆடி பலரது விமர்சனங்களை யுவராஜ் சம்பாதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மொடலிங்கில் கால்பதிப்பு

ரென்னிஸ் உலகின் இளம் முன்னணி வீராங்கனை பவுச்சர்ட், மொடலிங் துறையிலும் கால்பதித்துள்ளார்.

கனடாவின் இளம் ரென்னிஸ் வீராங்கனை பவுச்சர்ட், (வயது-20). இந்த ஆண்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், அவுஸ்ரேலிய ஓப்பன், பிரெஞ்ச் ஓப்பன் தொடர்களில் அரையிறுதிக்கு முன்னேறினார். தவிர, கிராண்ட்ஸ்லாம் தொடரில் இறுதிப் போட்டிக்கு (விம்பிள்டன்) தகுதி பெற்ற முதல் கனடா வீராங்கனை என்ற பெருமை பெற்றவர்.

தற்போது தரவரிசையில் 7ஆவது இடத்திலுள்ள இவருக்கென, தனி இரசிகர்கள் பட்டாளம் உருவாகியுள்ளது. 5 அடி, 10 அங்குல உயரமுள்ள இவர், தனது கிறங்கடிக்கும் அழகால் ரென்னிஸ் இரசிகர்களை மயக்கி வைத்துள்ளார்.

தற்போது ரஷ்யாவின் அனா கோர்னிகோவா, ஷரபோவா, செர்பியாவின் இவானோவிச் போல, மொடலிங் துறையிலும் கால்பதித்து அசத்தவுள்ளார் பவுச்சர்ட்.

இதற்காக உலகின் பிரபல மொடலிங் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஆகியுள்ளார். இதுகுறித்து பவுச்சர்ட் கூறுகையில், மொடலிங் துறையில் நுழைந்து சாதிக்க வேண்டும் என்பது எனது சிறுவயது எண்ணம். தற்போது டபிள்யு.எம்.இஜ. எம்.ஜி., நிறுவனத்துடன் இணைந்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இத்துறையில் எனது இலட்சியத்தை எட்ட இந்நிறுவனம் உதவும் என்று நம்புகிறேன்" என்றார்.

விரைவில் வாட்ச், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் நகை விளம்பரங்களில் பவுச்சர்டை இரசிகர்கள் காணலாம்.



## தொலைபேசி இணைப்பு உப தபாலகத்துக்கு வழங்க கோரல்

(வடமராட்சி)

பருத்தித்துறை திக்கம் உப தபால் நிலையத்திற்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் இப்பிரதேச மக்கள் நன்மையடைய முடியும்.

மேற்கண்டவாறு கோரும் மகஜரை திக்கம் மத்திய சனசமூக நிலையம் யாழ். பிரதி அஞ்சல் மா அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளது. இம்மகஜரில் இவ் உப தபால் நிலையத்திற்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்தும்போதும் இப்பிரதேச மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.(01)

## மதுப்பிரியர்களின் அட்டகாசம்


(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியடி தனியார் பஸ் நிலையத்துக்கு முன்பாக இரவு வேளைகளில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் தொடர்வதால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

தனியார் பஸ் நிலையத்திற்கு முன்பாக பல கடைகள் உள்ள நிலையில் ஒரு கடையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்கப்படுவதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் இங்கு மது அருந்திவிட்டு மதுப்பிரியர்கள் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதாகவும் இதனால் சிறார்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயற்பாடு குறித்து பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (33)

## வவுனியா பாவற்குளத்தின் வான் கதவுகள் திறப்பு



(வவுனியா)

வவுனியா பாவற்குளத்தின் வான் கதவுகள் நேற்று முன்தினம் திறக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

வவுனியாவின் பாரிய குளமான பாவறகுளத்தின் நான்கு வான் கதவுகளில் இரு கதவுகள் நேற்று முன்தினம் ஒரு அடி உயரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. 19.4 அடி கொள்ளளவைக் கொண்ட பாவறகுளத்தில் 20.1 அடி நீர நிரம்பியுள்ளமையினால் ஒரு அடி உயரத்துக்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வவுனியாவின் தாழ் நிலப்பிரதேசங்களில் நீர் தேங்கியுள்ளதுடன், வவுனியாவின் அனைத்து குளங்களும் வான் பாய்ந்து வருகின்றன.

தற்போது நிலவிவரும் காலநிலையால், வவுனியா மாவட்டத்தில் 510 குடும்பங்களைச் சேர்ந்த 1,943 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர்களுக்காக ஒரு தற்காலிக நலன்புரி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஓமந்தை கிராம சேவகர் பிரிவில் வேப்பங்குளம் கிராமத்தில் 2 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் நொச்சிமோட்டையில் 5 வீடுகளும் செட்டிகுளம் சூடுவெந்தபுலவில் 10 வீடுகளும் பன்றிக்கெய்தகுளத்தில் 9 வீடுகளும் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (70)

# கலைஞர்களின் வெளிவராத படைப்புக்களை சமூகம் வெளிக்கொண்டு வரவேண்டும்

### மான்ஸ் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலக்கிய படைப்பாளிகள் பலர் தமது இலக்கியங்களை உருவாக்கினாலும் அவர்களில் சிலரது படைப்புக்களே வெளி வருகின்றன. வெளிவராமல் இருக்கின்ற இலக்கிய படைப்புக்களை அமைப்புக்களும் சமூகமும் வெளிக் கொண்டு வரவேண்டும் என உடுவில் மான்ஸ் கல்லூரி அதிபர் வி. சுதானந்தராசா தெரிவித்தார்.

முருகேசு இரவீந்திரனின் 'நீரிலும் தெரியும் நிலவு' எல்லாமுமாய் இரு நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரை ஆற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் அம்புலி மாமா கதைப் புத்தகத்தை புத்தகங்களின் மத்தியில் ஒழித்து வைத்து படித்த அனுபவம் வளர்ந்த பின் பல கவிஞர்களின் இலக்கியங்களைப் படிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டேன்.

அம்புலிமாமாவில் ஆரம்பித்து மணிக்கொடி ஆசிரியர்களூடாக சுதந்திர ராமசாமி வரையானவர்களின் இலக்கிய வடிவங்களுடன் வகுப்பறைகளில் உலாவந்த சகபாடிகளான 150 நண்பர்களின் சார்பில் நண்பர் முருகேசன் இரவீந்திரனின் சிறுகதை இலக்கியத்தை வெளியிட்டு வைத்து உரையாற்ற வந்துள்ளேன்.

சிறுகதை இலக்கியங்களை வாசிப்பதும் ஆக்குவதும் வெளியிட்டு வைப்பதும் ஒரு விதமான சுகானுபவமாகும்.

நண்பர் ரவீந்திரனின் 'நீரிலும் தெரியும் நிலவு' மற்றும் எல்லாமுமாய் நூல் இரண்டையும் இங்கும் உலகத்தின் சகல பாகங்களிலும் வசித்து வரும் நண்பர்கள் சார்பாக ஆக்கியுள்ளனர்.

2012 இல் இவரது படைப்பான வாழ்க்கைப் பயணம் என்ற ஆக்க நூலும் நண்பர்களால் வெளியிடப்பட்டது. விஞ்ஞானம் என்சைகிளோபிடியா போன்ற பெரும் நூல் தொகுதிகள் விரல் நுனியில் அடக்கி விடுகின்றது. அதனால் நூல் வெளியீட்டு ஆர்வம் அருகி குறைந்து விட்டது என்றார்.

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தின் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள பாடசாலை மாணவர்களுக்கு தூய அன்னை சாரதா தேவியின் ஜெயந்தி தினத்தன்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அன்றைய தினம் சேவாச்சிரமத்தில் அன்னை சாரதாதேவியின் ஜெயந்தி தின விசேட பூசைகள், ஆராதனைகள் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து பேராசிரியர் எம். நடராஜ சுந்தரம் தலைமையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இச் சேவாச்சிரமத்தில் வருடா வருடம் ஏழை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

## நாடகப் போட்டியில் வென்றோருக்கு பரிசில்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

உலக முதியோர் மற்றும் சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட நாடகம் மற்றும் வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்கள், மூத்த பிரஜைகளுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, நாடக போட்டியில் சங்கானை பிரதேச செயலர் பிரிவின் தொடுவானம் எனும் நாடகம் முதலாம் இடத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிறை நிலா எனும் நாடகம் 2ஆம் இடத்தையும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பூக்களின் புலம்பல் எனும் நாடகம் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் ரூபினி வரதலிங்கம், மூத்த பிரஜைகள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோதமாக மணல் கடத்திய சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(கொடிகாமம்)

எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்து உழவு இயந்திரம் மூலம் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்திச் சென்ற சந்தேக நபர் ஒருவரை கொடிகாமம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் காலை கைது செய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் எழுதுமட்டுவாளில் இருந்து சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து அதனை கொடிகாமம் பகுதிக்கு கொண்டு செல்லும் போதே கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைகலப்பு சம்பவமொன்றுடன் தொடர்புடைய திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கு பிடியாணை பிறப்பித்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் உத்தரவிட்டார்.

திருநெல்வேலி பகுதியில் இடம்பெற்ற கைகலப்பு சம்பவம் ஒன்றுடன் இந்த மூன்று பெண்களும் தொடர்புபட்ட நிலையில், அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த வேளை, மூன்று தடவைகள் அவர்கள் ஆஜராகியிருக்கவில்லை.

இதனையடுத்து, அந்தப் பெண்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோப்பாய் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (11)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

(வவுனியா)


வவுனியாவில் கடந்த வருடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சிக்கான நிவாரணப்பணம் காசோலையக வழங்கப்பட்டு வருகின்றது. 2013ஆம் ஆண்டு எற்பட்ட வறட்சியால் வவுனியாவில் பாரியளவில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. இதனையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதியால்அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் விவசாயி ஒருவருக்கு ஏக்கருக்கு தலா 2800 ரூபா வழங்கப்பட்டு வரும் நிலையில் ஒருவர் 5 ஏக்கருக்கு மாத்திரமே நிவாரணம் பெற்றுக் கெள்ள முடியும்.

தற்போது பெரும் போக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் இந்த நிவாரணத்தின் முலம் உரம், களைநாசினி போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கு பெரும் உதவியாக உள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

இக்கொடுப்பனவுக்கான ஆரம்ப கட்ட நிகழ்வு வவுனியா மாவட்ட அரச அதிபர் தலைமையில் அண்மையில் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (70)

# ஆலயத்தில் துணிகர திருட்டு பொலிஸார் விசாரணை



(மன்னார்)

மன்னார், எழுத்தூர் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை ஆலயம் திறக்கப்பட்டபோது ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள விக்கிரகங்கள் சேதப்படுத்தப்பட்டு அம்மனின் பெறுமதி மிக்க நகைகள் மற்றும் இயந்திரத்தகடுகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் குறித்து மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2



# மகிந்தவை தண்டித்து ரணில் மற்றும் சந்திரிகாவுக்கு வெகுமதி வழங்குவது பற்றி...

- கலாநிதி. தயான் ஜயதிலக -

(நேற்றைய தொடர்ச்சி)

ஜெனரல் பொன்சேகா, ஜானக பெரேரா மற்றும் காமினி ஹெட்டியாராய்ச்சி போன்றவர்கள் சந்திரிகாவின் இரண்டு தவணை ஜனாதிபதி ஆட்சியில் அவரது இராணுவத்தில் இருந்தவர்கள்தான் இருந்தாலும் யுத்தத்தை வெற்றி கொள்வதில் அவர் தோல்வியுற்றார் - ஏனென்றால் அதை வெற்றி கொள்ள முடியும், பிரபாகரனை இராணுவ ரீதியாக தோற்கடிக்க முடியும் என்று அவரால் நினைக்க முடியவில்லை.

மகிந்த ராஜபக்ஷ யுத்தத்தை எங்களுக்காக வென்றார். ஏனென்றால் அவரிடம் அரசியல் மன உறுதி மற்றும் தெளிவு என்பன இருந்தன.

மகிந்த ராஜபக்ஷதான் நோர்வேயின் அனுசரணையுடன் அமெரிக்கா நடத்த விருந்த வெளியேற்ற நடவடிக்கை முயற்சியை இந்தியாவின் பின் துணையை கோரி தடுத்து நிறுத்தியவர். மிகவும் முக்கியமாக இறுதி வெற்றியை அணுகுவதற்கு சில வாரங்களுக்கு முன்பு, மனிதாபிமான ரீதியில் யுத்தத்தை நிறுத்தவும் மற்றும் பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிக்கவும் அவர் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோது, திமிருடன் கூச்சல்போட்ட டேவிட் மிலிபான்ட்டிடம் இலங்கை இப்போது ஒரு பிரித்தானியக் காலனி இல்லை என்று வெறுப்புடன் துணிந்து கூறியவர் மகிந்த ராஜபக்ஷ.

(இந்தக் கதையை பாரிசில் வைத்து நான் கேள்விப்பட்டபோது ஆச்சரியம் அடையவில்லை, 2007இன் ஆரம்பத்திலிருந்து நடந்த கலந்துரையாடல்களில் நான் ஒரு அங்கமாகப் பணியாற்றியபோது ஜனாதிபதி ராஜபக்ஷ, அமெரிக்க ராஜாங்க உதவிச் செயலாளர் ரிச்சட் பௌச்சரிடம் "என்னை மன்னியுங்கள் திரு. பௌச்சர், என்னிடம் உள்ள பயங்கரவாதிகள் இஸ்லாமியர்களாக இல்லாமலிருப்பதற்கு என்னால் என்ன செய்ய முடியும்?" என்று சொன்னதை நான் கேட்டிருக்கிறேன்)

யுத்தத்தை நிறைவு செய்ததற்கான பெருமையைக் கோரும் சம்பிக்க ரணவக்க கூட அந்த பேச்சு வார்த்தைகளின் சுற்றாடலில் இருக்கவில்லை. ஜெனரல் சரத் பொன்சேகா அங்கு சமூகமளித்திருக்கவில்லை. கோத்தாபயவும் அந்த மேடையின் மையத்தில் இருக்கவில்லை. அந்த முடிவு கண் இமைக்கும் நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதல்ல, அரசியல் மற்றும் இருத்தியலில் என்னதான் பின் விளைவுகள் ஏற்பட்டாலும் யுத்தத்தை முடித்து வைப்பது என்கிற தீர்மானம் ஜனாதிபதி ராஜபக்ஷவினால்தான் மேற்கொள்ளப்பட்டது.

அவரது மனத்துணிவு மற்றும் மேற்கின் அழுத்தங்களை புறந்தள்ளியமை போன்ற துணிகரச் செயல்களுக்காக ஒரு விலையை அவர் கொடுப்பதற்கான நிலையை எங்கள் கைகளினால் ஏற்படுத்தக் கூடாது.

புலிகளைத் தோற்கடித்ததற்காகவும் மற்றும் பிரபாகரனின் மரணத்துக்காகவும் தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் அவரைப் பழிவாங்க காத்திருக்கிறார்கள். மேற்கிற்கு மேலாக அவர் சீனாவையும் மற்றும் ரஷ்யாவையும் தெரிவு செய்ததுக்காக மகிந்தவை ஒரு உதாரணமாகக் காட்டி அவருக்கு தக்க பாடம் புகட்ட மேற்கு விரும்புகிறது. இந்த இரண்டு நிர்ப்பந்தங்களும் மிகவும் வெளிப்படையாக ஜெனிவாவில் ஒன்று சேருகின்றன.

மாற்றத்துக்கான தற்போதைய தருணத்தில் மாற்றத்துக்கான விடயம் பற்றி நாங்கள் விவேகமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

சுயமாக மறையவுள்ள சிறிசேனவின் ஜனாதிபதி ஆட்சியில், அதிகாரம் கொந்தளிப்பான ஒரு பாராளுமன்றத் திடம் மாற்றப்படுவது. பொருளாதார ரீதியாக நவீன தாராண்மைவாதியான் விக்கிரமசிங்க பிரதமராவது. சோனியா காந்தி காரணியாக சந்திரிகா மாற்றமடைவது, பிடிவாதமான ஒரு வட மாகாணசபை, மேட்டுக்குடியான சிவில் சமூகம் - அரசு சாரா நிறுவனங்கள் - ஒத்துழைப்பு மற்றும் இணக்கம் சார்ந்த விடயங்களில் மேற்கின் அழுத்தம், சர்வதேச சட்டங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் ஐநா விசாரணை, மற்றும் தீவிர தனியார்மயம் போன்றவை என்னை எச்சரிக்கை உணர்வால் நிரப்புகிறது. ஏனென்றால் மையவிலகல் காரணிகளைவிட மையநோக்கு காரணிகள் அதிகமாக உள்ளன.

ரணில் - சந்திரிகா - சொல்க்கைம் வருடங்களில் நாங்கள் வாழ்ந்த மேற்கு ஆதிக்கமுள்ள அரைக் காலனித்துவ இலங்கையை நோக்கி நாங்கள் மீண்டும் செல்வதற்குத் தயாரா? அந்த இழிவான தசாப்தம் தேசிய இறையாண்மையை குறைத்து

# குப்பையை ஒழிக்க குறுக்கு வழி!



பொதுவாக வெளிநாடு சென்று வருபவர்களுக்கு நம் விமான நிலையத்தில் வந்து இறங்கிய மறு கணமே தோன்றும் எண்ணம் நம் நாடு குப்பையாக இருப்பது பற்றியதுதான். ஆனால் குப்பையை ஒழிக்க எத்தனை திட்டங்கள் சட்டங்களைப் போட்டென்ன... புற்று நோய்க்கு ஷாம்பூ மருந்தாக முடியுமா?

ஒரு அலுவலகத்தை எடுத்துக் கொள்வோம். காலை எட்டு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை அதை சுத்தம் செய்ய வேண்டிய துப்புரவுப் பணியாளர்களின் மாத ஊதியம் 6000 ரூபா. பணி நிரந்தரம் கிடையாது. ஒரே நொடியில் பணியிலிருந்து நீக்கி விடலாம். இந்த வேலைக்காக அந்தப் பணியாட்கள் வெகுதொலைவிலிருந்து வர வேண்டும். என் நண்பர் ஒருவர் ஒரு மாட்ரிமோனி (திருமண தரகு) நிறுவனத்தில் பணி புரிகிறார். மாத சம்பளம் நாலு லட்சம். இவ்வளவுக்கும் அவர் தன்னை மிடில் க்ளாஸ் என்றுதான் சொல்லிக் கொள்கிறார். சமீபத்தில் ஒரு கோடி ரூபாயில் ஒரு வீடு வாங்கினார். இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வை நீங்கள் வளர்ச்சி அடைந்த எந்த நாட்டிலும் பார்க்க முடியாது. இதை ஓரளவாவது சரி செய்யாமல் இங்கே ஒரு மாற்றத்தையும் கொண்டு வர முடியாது.

நாட்டில் நெடுஞ்சாலைகளைத் தவிர வேறு எங்குமே சரியான சாலைப் போக்குவரத்து கிடையாது. கற்காலத்தில் வாழ்கிறோமோ என்ற கவலையை உண்டாக்குவதாக இருக்கின்றன சாலைகள். ஒரு அடி ஆழத்துக்குப் பள்ளம் இருப்பதெல்லாம் சர்வ சாதாரணம். எங்கே பார்த்தாலும் சேரிகள். சாக்கடைகளை ஒட்டியே அஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட குடிசைகள். பத்துக்குப் பத்து அடி தான் ஒரு குடும்பத்துக்கே வாழ்விடம். இவர்களிடம் போய் நீங்கள் குப்பை போடாதீர்கள் என்று சொன்னால் எப்படிப் போடாமல் இருப்பார்கள்?

பிறந்த குழந்தைக்கு என்ன தெரியும்? மேலே சொன்ன சேரியில் பிறக்கும் ஒரு குழந்தைக்கு நான்கு வயதில் நல்ல கல்வியை இந்தச் சமூகம் தருகிறதா? கல்வியில் சமத்துவம் செய்யாமல் குப்பை போடாதே என்றால் என்ன அராஜகம் இது? பணக்காரனின் குழந்தைக்கு எல்கேஜியில் சேர்க்க ஐந்து இலட்சம். அந்தக் குழந்தை அஞ்சு வயதிலேயே பிரிட்டிஷ்காரன் மாதிரி இங்க்லீஷ் பேசுகிறது. என் வீட்டில் பணிபுரியும் பணிப்பெண்ணின் குழந்தைக்கு இந்தக் கல்வி கிடைக்கிறதா?

மேட்டுக்குடியினர் படிக்கும் பிரபலமான ஒரு பாடசாலை என் வீட்டுக்கு எதிரே உள்ளது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு முதுமலை யானைகள் சரணாலயம்தான் ஞாபகம் வருகிறது. ஒவ்வொரு குழந்தையும் அப்படித்தான் யானை யானையாக இருக்கின்றன. அதே சமயம் என் வீட்டைச் சுற்றிலும் பல ஏழைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே படிக்கும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவி கூட சவலைப் பிள்ளை மாதிரி இருக்கிறாள். அந்தக் குழந்தைகளின் கால்களில் நான் செருப்பையே பார்த்ததில்லை.

கல்வி என்பது எப்போது எல்லா குழந்தைகளுக்கும் சமமாக அளிக்கப்படுகிறதோ அப்போதுதான் இந்நாட்டில் ஒரு கடுகு அளவு மாற்றமாவது வரும். அதுவரை குப்பை போடாதே, சிகரெட் குடிக்காதே என்று சொல்வதெல்லாம் வெறும் ஏமாற்று வேலை.

இன்னொரு பிரச்சினை, ஊழல். நாடு முழுவதுமே ஊழலில் தத்தளிக்கிறது. இதைச் சொல்லித்தான் மோடி ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவரால் இதை எதிர்த்து ஒரு விரலைக் கூட அசைக்க முடியவில்லை. காரணம், சமீபத்தில் ஆய்வாளர் ராமச்சந்திர குஹா எழுதியது போல் இந்தியாவுக்கு நல்ல முதல்வர்களே தேவை. மோடி தனது மாநிலத்தை முன்னேற்றிய சிறந்த முதல்வர்களில் ஒருவராக இருந்தார். நல்ல பிரதமராக முடியவில்லை. நல்ல முதலமைச்சர்களால்தான் மாநிலத்துக்கு ஏதாவது நல்லது செய்ய முடியும்.

இப்படிப்பட்ட ஆதாரமான பிரச்சினைகள் இருந்தாலும் குப்பையை ஒழிக்க ஒரு எளிமையான குறுக்கு வழி உள்ளது. குழந்தைகளுக்கு மிகச் சிறிய வயதிலேயே குப்பையைக் கண்டபடி போடுவது குற்றம் என்று கற்பிக்கப்பட வேண்டும்.

- இந்து நாளிதழ் கடிதத்தில்



# இவர்கள்.

இயேசுநாதரிடம் சீடர் ஒருவர், "உலகில் மிகவும் இனிமையான உணவு எது?" என்று கேட்டார். அதற்கு இயேசுநாதர், "ஒருவன் தன் உழைப்பால் பெற்ற கூழ் அமிர்தத்திலும் மேலானது" என்றார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கனிடம், "தங்களின் மதம் என்ன?" என்று நிருபர் ஒருவர் கேட்டார். அதற்கு லிங்கன், "நல்லதைச் செய்யும்போது எனக்கு மகிழ்ச்சியும் கெட்டதைச் செய்யும்போது வருத்தமும் உண்டாகிறது. அதுதான் என் மதம்" என்று பதிலளித்தார்.

திப்பு சுல்தான் மசூதிகளுக்கு மட்டுமின்றி கோயில்கள் மற்றும் தேவாலயங்களுக்கும் நன்கொடை கொடுத்து உதவினார். இது குறித்து திப்பு சுல்தானிடம் கேட்டபோது அவர் சொன்னது: "இப்பொழுது கேட்கிறதே கோயில் மணி ஓசை. அந்த ஓசை எந்த மதத்துக்குச் சொந்தமானது என்று உங்களால் சொல்ல முடியுமா?"

குழிதோண்டிப் புதைத்துவிட்டது. தவிர்க்க முடியாத அந்த பின்னடைவு முனைவாக்கத்திற்கு நாங்கள் தயாரா?

சமாதானமான ஜனநாயக ஆட்சி மாற்றம் என்கிற ஒரு விடயம் உள்ளது. ஆனால் பல தசாப்தங்கள் பழமையான நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு தற்போதைய ராஜபக்ஸ ஆட்சியினால் என்ன செய்ய முடியும் அது ஒரு அரசாங்க அமைப்பு?

ஒரு ஜனாதிபதி தேர்தல் அரசியலமைப்பு மாற்றத்துக்கான ஒன்றல்ல. அது ஒரு தலைவரை நாட்டுக்கு, அரசாங்கத்துக்கு தேர்ந்தெடுக்க நடத்தப்படுவது. தனது மக்களையும் நாட்டையும் எதிரியிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பு என்கிற முக்கிய பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த தலைவரை அவரது சேவையிலிருந்து அகற்ற எனக்குத் தயக்கமாக உள்ளது.

இலங்கை மக்களின் பிரதான எதிரி மகிந்த அல்ல. அதேபோல ரணில் மற்றும் சந்திரிகா ஆகியோர் நிச்சயமாக இலங்கைப் பிரஜைகளுக்கு அவரை விடச் சிறந்த நண்பர்களுமில்லை.

ஒரு வலுவான தலைவரை மிகவும் முக்கியமான விடயத்தில் வெற்றியை நிரூபித்த ஒருவரை வீழ்த்திவிட்டு அவருக்குப் பதிலாக நிரூபிக்கப்படாத ஒருவரை கொண்டு வருவது எனக்குத் தயக்கமாக உள்ளது. அதிகாரத்தின் பெரும்பகுதியை தோல்வியாளர்கள் என நிரூபித்துக்காட்டிய இருவருக்காக விட்டுக் கொடுப்பது எனும்போது இன்னும் அதிகம் தயக்கமாக உள்ளது.

மாற்றங்கள் தந்திரமானவை மற்றும் இது நிச்சயமாக நாங்கள் யுத்தத்துக்கு பின்னான ஒரு மாற்றக் காலத்தில் அதுவும் ஒரு தேசிய தலைமைத்துவ மட்டத்தில் பரீட்சித்துப் பார்க்கவேண்டிய ஒன்றல்ல.

# உ.வே.சா.வின் முக்கிய எதிரி

உ.வே.சாமிநாதய்யர் பழந்தமிழ் நூல்களைக் கண்டுபிடித்து வெளியிடும் முயற்சியில் அடைந்த சிரமங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோ வித எதிர்ப்புகளும் எதிரிகளும் அவருக்கு ஏற்பட்டார்கள். அவருடைய எதிரிகளில் முக்கியமான எதிரி கறையான்! கறையான் படைகளுடன் அவர் நடத்திய போரை ஒரு மகாகவி வர்ணிக்க வேண்டுமே தவிர, சாதாரண வார்த்தைகளில் எழுத முடியாது.



ரயில் பாதையில் வெகுதூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு வீட்டின் பரணில், ஓர் ஓலைச்சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதேசமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் கிடக்கும் செய்தியை உ.வே.சாமிநாதய்யர் எப்படியோ தெரிந்து கொண்டு விடுவார். அவர் கிராமத்தை நோக்கி விரைந்து வருவார். ரயிலோ, கட்டைவண்டியோ, கால்நடையோ எதுவாயிருந்தாலும் அவருக்குக் கவலையில்லை. பகல் இரவு என்று பாராமல் ஓடி வருவார்.

கறையான்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவரில் ஏறி, உத்திரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு முன்னேறி, நாளுக்கு நாள் ஓலைச்சுவடியை நெருங்கிக் கொண்டிருக்கும். இதோ ஓலைச்சுவடி கிடைக்கும் இடம் அவற்றின் பார்வைக்கு வந்துவிட்டது.

"பேஷ்! பல நாளைக்கு ஆகாரம் ஆயிற்று!" என்று அவை கும்மாளம் அடித்துக்கொண்டு நெருங்குகின்றன. ஓலைச்சுவடியை ருசியும் பார்த்தாகி விட்டது. நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு அவை சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்குகின்றன.

அப்பேர்ப்பட்ட சமயத்தில் அந்த வீட்டைத் தேடி வந்து சேர்கிறார் உ.வே.சாமிநாதய்யர். வீட்டு எஜமானனைப் பார்த்து, "ஐயா! உங்கள் வீட்டில் பழைய ஓலைச்சுவடி ஒன்று இருக்கிறதாமே?" என்று கேட்கிறார். "பரண் மேல் கிடந்தது. எதுக்குக் கேட்கிறீர்கள்?" என்கிறார் வீட்டுக்காரர்.

அவரிடம் சாமிநாதய்யர் பழந்தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிப் பேசி, "ஓலைச்சுவடியைப் பார்க்க வேண்டும்" என்கிறார். "சாயங்காலம் பார்ப்போம் - இப்போது வயலுக்குப் போகிறேன்" என்கிறார் வீட்டுக்காரர். இதற்குள் சுவரில் உள்ள கறையான் கூட்டின்மேல் சாமிநாதய்யரின் பார்வை விழுகிறது. "ஐயையோ, பரண்மேல் கறையான் ஏறிக் கொண்டிருக்கிறதே. சுவடி போய்விடப் போகிறதே! உடனே பார்த்தால் தேவலை" என்கிறார் சாமிநாதய்யர். அவருடைய பதைபதைப்பை வீட்டுக்காரர் பார்த்துவிட்டு, பரண்மேல் ஏணி வைத்து ஏறி ஓலைச்சுவடியை எடுத்துக் கீழே போடுகிறார்.

சுவடியின் ஓரங்களில் கறையான் வாய் வைத்திருக்கும் அடையாளங்கள் தெரிகின்றன. சாமிநாதய்யர் அதை அவசரமாக உதறி எடுத்துத் தன் தலை மீது வைத்துக் கொண்டு, ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

பிறகு ஓலைச்சுவடியைப் பிரித்துப் பார்க்கிறார். ஐயரின் கண்கள் விரிகின்றன. வியப்பினால் அல்ல அளவில்லாத ஏமாற்றத்தினால்! ஏனெனில் அவர் தேடிவந்த பழந்தமிழ் நூல் ஒன்றும் அந்த ஓலைச்சுவடியில் இல்லை. சமீபத்தில் எழுதப்பட்ட உபயோகமற்ற ஸ்தல புராணம் அது. "இவ்வளவுதானா?" என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார். "இதுவும் ஒரு மூலையில் இருக்கட்டும், எதுக்காவது பிரயோஜனப்படும்" என்று எண்ணி ஓலைச்சுவடியை எடுத்துக்கொண்டு கிளம்புகிறார். எங்கே? இன்னொரு ஊரில் இன்னொரு வீட்டுப் பரணில் கிடக்கும் இன்னொரு ஓலைச்சுவடியைத் தேடித்தான்.

**- 'உ.வே.சா. பன்முக ஆளுமையின் பேருருவம்' நூலில் கல்கி கட்டுரையிலிருந்து.**

# சொன்னார்கள்...



என்னை உண்மையானவளாக கருதுகிறேன். என்னுடைய நடிப்பு உண்மையானது என்று நம்புகிறேன். நான் நடிக்கும் படங்கள் ஒவ்வொன்றையும் நான் என்னுடைய குழந்தைகளாகவே கருதுவதால் என்னுடைய வேலையில் நான் எதையும் ஏமாற்ற முடியாது. படப்பிடிப்பின் போது ஒருநாள் கூட நான் சோர்ந்து போனதில்லை. ஒரு படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டால் முழுமையான ஒத்துழைப்பை கொடுப்பதுதான் என்னுடைய கொள்கை...

சமீபகாலத்தில் நான் யார் கண்களுக்கும் தென்படாத மர்மப் பெண்ணாக வாழ்க்கை நடத்துவதாக செய்திகள் வரத் தொடங்கின. வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடப்பதற்கு ஒரு மாறுதலாக வெளி நிகழ்ச்சிகளில் பங்கேற்க நினைத்தேன். அதனால்தான் "சூப்பர் நானி" படத்தின் விளம்பரத்துக்கான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஒப்புக்கொண்டேன்.

எனக்கும் டி.வி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென்ற எண்ணம் எழுந்துள்ளது. அமிதாப்பச்சன்போல் பெரிய அளவில் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென்பது என்னுடைய ஆசை அல்ல. இது என்னுடைய ஆளுமையை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

முப்பத்தாறு ஆண்டுகளாக திரையுலகில் இருக்கிறேன். வித்யாபாலன், கத்ரீனா கைப் போன்று எத்தனையோ திறமையான இளம் நடிகைகள் இப்போது வந்துள்ளனர். இருப்பினும் இன்னும் எனக்கு ரசிகர்கள் ஆதரவு இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஒருவேளை மீனாகுமாரி, வகிதா ரஹ்மான் போன்ற நடிகைகள் இருந்த காலத்தைச் சேர்ந்த கடைசி நடிகை நான் என்ற காரணமாகவும் இருக்கலாமோ என்றும் தோன்றுகிறது.

**- நடிகை ரேகா**

லிங்கா திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் பேசிய இயக்குநர், நடிகர் ரஜினிகாந்த் அனைவரும் இப்படம் மிகவும் பிரம்மாண்டமானது. படையப்பா திரைப்படம்போல் பிரம்மாண்ட வெற்றி பெறும் என்றெல்லாம் பேசினார்கள்.

பின்னர், கதை திருடப்பட்டது அப்படி.. இப்படி என்று இவர்களாகவே தூண்டிவிட்டு வழக்கு பதிவு செய்யவைத்து எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தினர். இதையெல்லாம் நிஜம் என நம்பி என்னைப் போன்றோர் பட



விநியோக உரிமையை வாங்கினோம். ஆனால், இன்று ரூபா 8 கோடி நஷ்டப்பட்டிருக்கிறேன்.

படம் ரிலீஸ் பண்ணிய தேதியே மிகவும் தவறானது. ரஜினிகாந்த படத்தை அவரது பிறந்தநாளில் ரிலீஸ் செய்திருக்கிறார். ரஜினி பிறந்த நாள் என்ன தேசிய விடுமுறையா? மாணவர்களுக்குப் பரீட்சை நேரத்தில் படத்தை ரிலீஸ் செய்தால் தியேட்டருக்கு யார் வருவார்கள். இத்தனை வருடம் சினிமாவில் இருக்கும் ரஜினிக்கு இதுகூடவா தெரியாது.

**- நஷ்டமடைந்த விநியோகஸ்தர் ஒருவர் யூ-டியூபில்**

முத்து படப் பாடல் பதிவின்போது ரஜினியிடம் பேசிக்கொண்டிருந்தபோது இந்தக் கதையைச் சொன்னேன். மாமன்னன் அலெக்ஸாண்டர் தன் மரணத்தை உணர்ந்து கொண்டான். படைத் தலைவனை அழைத்து, "நாளை காலை சூரிய உதயத்தில் நான் இருக்க மாட்டேன். என் உடலை தூக்கிச் செல்லும் போது, என் கைகள் இரண்டும் சவப்பெட்டிக்கு வெளியே இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்" என்றானாம்.



படைத்தலைவன் பதறிப் போய், "ஏன் மன்னா? ஏன் அப்படி?" அதற்கு அலெக்ஸாண்டர்... "இந்த உலகம் முழுவதையும் வென்று, இனி வெல்வதற்கு நாடு இல்லையே என கவலைப்பட்ட அலெக்ஸாண்டர் கூட போகும் போது வெறும் கையோடு போனான் என்பதை இந்த உலகம் தெரிந்து கொள்ளட்டும்..." என்று நான் சொல்லி முடிக்க, "அற்புதம்... இதை அப்படியே பாட்டுக்குள் கொண்டு வர முடியுமா? என கேட்டார் ரஜினி. "மண்ணின் மீது மனிதனுக்கு ஆசை.... மனிதன் மீது மண்ணுக்கு ஆசை... மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது... இதை மனம்தான் உணர மறுக்கிறது." என எழுதித் தந்தேன்.

**- கவிஞர் வைரமுத்து**


இந்தத் தம்பி ராமையா. படங்களில் அவர் போடும் காட்டுக் கூச்சல் தாங்க முடியவில்லை. பார்த்திபனின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம். ஒரு நல்ல முயற்சி. அதில் கூட இந்தத் தம்பி ராமையா வின் அலட்டலும் காட்டுக்



கூச்சலும் தாங்க முடியாமல் இருந்தது. இவ்வளவுக்கு அவர் நடித்த முதல் படமான மைனாவில் அவர் நடிப்பைப் பார்த்து வியந்தவன் நான். கொஞ்ச காலத்துக்கு இயக்குநர்கள் அவருக்கு ஊமை வேஷம் கொடுத்தால் நான் அவர்களுக்கு ரொம்பவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

**- சாரு நிவேதிதா**

இயக்குநர் ஷங்கரின் விசேட தன்மை பிரமாண்டம் அல்ல, அவரிடம் உள்ள நகைச்சுவையுணர்வுதான். பத்து நிமிடங்கள் அவரிடம் நெருங்கிப் பேசினால், ஷங்கரா இப்படி? என்று நீங்கள் ஆச்சரியத்தில் உறைந்து போகலாம். "ஜீன்ஸ்" கதைக்கு அவர் முதலில் தேடிப் பிடித்த ஆள் யார் தெரியுமா? கவுண்டமணி. இரட்டை



வேடங்களில் கவுண்டமணியை அந்தப் படத்தில் நடிக்க வைப்பதுதான் ஷங்கரின் திட்டம். ஆனால், அந்த சமயத்தில் கவுண்டமணி பிஸி. கால்ஷீட் கிடைக்கவில்லை. திட்டமிட்ட நாள்களுக்குள் முடித்தாக வேண்டிய படம் அது என்பதால், நடிகர்களைத் தொடர்ந்து. கதையிலும் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன.

**- ஷங்கரின் உதவிஇயக்குநர் கார்த்தி ஜி.கிரீஷ்**

# மதி சுதாவின் 'கரகம்' ஆவணப்படம் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

மதி சுதா இயக்கிய "கரகம்" ஆவணப்படத்தை, இப்படைப்பை தயாரித்த கரவெட்டி பிரதேச செயலகத்திடமே உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

28 நிமிடங்களைக் கொண்ட இந்த முழு ஆவணப்படத்தை இயக்குநர் மதி சுதா கையளிக்க கரவெட்டி பிரதேச செயலர் சிவசிறி, கலாசார உத்தியோகத்தர் சிவஞான சீலன் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். இது மதி சுதாவின் முதலாவது ஆவணப் படமாகும். (48)

# அதிகரித்துள்ள வாகனபோக்குவரத்து விபத்துக்களை எதிர்நோக்கும் பயணிகள்

(யாழ்ப்பாணம்)


நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு வீதிகளில் சனத்தொகை மற்றும் வாகன போக்கு வரத்தும் அதிகரித்துள்ள நிலையில் தினமும் கே.கே.எஸ்.வீதியில் விபத்துக்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் சுன்னாகம் சந்தி மல்லாகம் பகுதிகளில் ஒரே நாளில் விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் தெல்லிப்பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கே.கே.எஸ்.வீதியில் வேக கட்டுப்பாட்டை மீறி மோட்டார் சைக்கிள், ஆட்டோ, ஏனைய வாகனங்கள் மின்னல் வேகத்தில் பயணிப்பதாக தெரிவிக்கப்படுகின்றன. இந்த வேகக் கட்டுப்பாட்டை எவரும் தடை செய்வதாக தெரியவில்லை எனவும் அதனலேயே விபத்துக்கள் அதிகம் இடம்பெறுவதாகவும் சமூக ஆர்வாலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் விபத்து நடைபெற்ற சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதத்தால் கண்ணாடி துண்டுகள் வீதிகளில் அப்புறப்படுத்தப்படாமல் சிதறிக் காணப்படுவதாக நடத்து செல்வோர், சைககிளில் ஏனைய வாகனங்களும் சேதங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கும் பொதுமக்கள் உரியவர்கள் பொதுமக்கள் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# நூற்றாண்டு விழாவும் பேராளன் நூல் வெளியீடும்



(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவும் பேராளன் நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதற்கான நிகழ்வுகள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட பிரதிநிதி ஆ. தீபன் திலீசன் தலைமையில் யா.வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையில் காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலினின் பேராளன் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

அதனையடுத்து யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆய்வுரையினையும் சமகாலத்தில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

மேலும் வடக்கு மாகாண ஆசிரியர் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் முன்னாள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் செயலாளர் வே. சிவராசா உரையாற்றினார்.


# கட்டிவைத்து பொருட்கள் திருட்டு யாழ்.பிறவுண் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதியிலுள்ள அழகுக்கலை நிலையத்துக்குள் நுழைந்த இருவர் அங்கிருந்தவர்களை கட்டிவைத்துவிட்டு, 4 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகள், பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை திருடியுள்ளதாக பாதிக்கப்பட்ட அழகுக்கலை நிலைய உரிமையாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

8 கைத்தொலைபேசிகள், மடிக்கணனி, ஐ பாட், 2 பவுண் சங்கிலி, ஒரு தொகுதி வெளிநாட்டு நாணயம், இலங்கை ரூபா (2300 ரூபா) ஆகியவையே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

நடன நிகழ்ச்சியொன்றை நடாத்துவதற்கு தயாராக இருந்த வேளை, அங்கு வந்த இரண்டு நபர்கள் அந்த நிகழ்வை நடாத்தக்கூடாது என எச்சரிக்கை செய்ததுடன், தங்களை கட்டிப்போட்டு, பொருட்களை திருடியதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் இரதததான முகாம் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சுமார் 35 பேர் வரையில் கலந்துகொண்டு இரத்ததானம் செய்வதனைக் காணலாம். (48)

# மார்கழி மாத சதுர்த்தி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலய மார்கழி மாத சதுர்த்தி உற்சவம் நாளை இடம்பெறவுள்ளது.

நாளை முற்பகல் 10 மணிக்கு நவகும்ப பூசை இடம்பெற்று விசேட அபிசேகத்துடன் கும்ப அபிசேகமும் இடம் பெறுவதுடன் விசேட பூசையும் நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் வசந்த மண்டப பூசை இடம்பெற்று விநாயகர் உள்விதி உலாவும் நடைபெறும். தேசமான்ய து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இச் சதுர்த்தி உற்சவத்தின் போது வழமை போல அன்னதான நிகழ்வும் இடம்பெறும. (இ)

## முரசின் இன்றைய பலன்

(24.12.2014 புதன்கிழமை)

ஐய வருஷம் மார்கழி மாதம் 09 ஆம் திகதி.
திருதியை / அமிர்த சித்தம்.
உத்தராட நட்சத்திரம் மாலை. 06.28 வரை. பின் திருவோணம்.
இராகு காலம 12.26 - 01.56 வரை. சுபநேரம 04.56 - 06.26 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
கொடுத்தவாக்கினைக் காப்பாற்ற முடியாது திண்டாடுதல்.

**ரிஷபம்**
போலியான பொருட்களில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்.

**மிதுனம்**
பணவரவில் இருந்த தடைகள் நீங்கி பொருளாதாரம் முன்னேறும்.

**கடகம்**
மக்களால் பெருமையும் பூரிப்பும் ஏற்படும்.

**சிம்மம்**
உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டையாவது போல் செய தொழிலில் கவனம் எடுங்கள்.

**கன்னி**
பரீட்சைச்சித்தியினால் வெளியூர் மணமகளைக் கைப்பிழக்கும் யோகமுண்டு.

**துலாம்**
ஏழரைச் சனி இருப்பதினால் வழக்கு பாதகநிலை ஏற்படுத்திவிடலாம்.

**விருச்சிகம்**
துண்டிக்கப்பட்ட தொடர்புகள் மீண்டும் ஏற்படுத்தல்.


**தனுசு**
புத்திரபாக்கியத்திற்கு ஏற்பட்ட தடை நீங்க தெய்வதலத்திற்கு விஜயம் மேற்கொள்ளல்.

**மகரம்**
பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி சேமிக்கும் நிலைப்பாட்டில் கால்பதித்தல்.

**கும்பம்**
சமயோசித புத்தியினால் வரவிருந்த இடர்பாடு அற்றுப்போதல்.

**மீனம்**
கொடுத்த வாக்கினை நிறைவேற்றும் கைங்கரியம் ஏற்படல்.

# மருதங்கேணி கலாசார விழாவில் கலைஞர்கள் கௌரவிப்பு



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் பதின்மூன்று ஆண்டுகளின் பின்னர் இவ்வாண்டு கலாசார விழாவும், "மருதசாகரம்" என்னும் வடமராட்சி கிழக்கின் பாரம்பரியங்களை உள்ளடக்கிய சிறப்பு நூலும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் பதினைந்து கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளார்கள். அக்கலைஞர்களில் பசுபதி, ஏ.விஜயரட்ணம், இராசரத்தினம் ஆகியோர் இணைந்து கிராமத்திற்கு பெருமைசேர்த்துள்ளனர்.

இவ் விருதுபெற்ற கலைஞர்களில் சிதம்பரப்பிள்ளை பசுபதி ஓய்வு பெற்ற மருதங்கேணி பதில் உதவி அரசாங்க அதிபரும், பருத்தித்துறை பிரதேச செயலாளருமான வைரவப்பிள்ளை விஜயரட்ணம், "ஈழத்தின் சௌந்தரராஜன் என்கின்ற பட்டம் பெற்ற சிறந்த பாடகர்" சாமித்தம்பி இராசரத்தினம் "இயற்துறை, பாரம்பரிய கலைக்கூத்து" இவற்றுக்காக இவர்களுக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் ப.திருலிங்கநாதன் பொன்னாடைபோர்த்தி, சந்தண மாலையினால் அலங்கரித்த பின்னர் இவர்களுக்கான நினைவுச்சின்னத்தை சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் வழங்கி கௌரவித்தார்.

'மருதசாகரம்' என்னும் சிறப்பு நூலில் கிராமத்தின் தலை யாக விளங்கும் நாகராஜன் குடி கொண்டு மக்களை காத்தருளும் பூர்வீகநாகதம்பிரான் ஆலயமும் மற்றய ஆலயங்களும் அடங்கப்பட்டுள்ளன. இந் நூலின சிறப்புப்பிரதிகளை கிராமத்தவர்களும் பெற்று விழா வினை சிறப்பித்துள்ளார்கள்.

# 'நல்லை தீபம்' சஞ்சிகை வெளியீடு

நல்லூர் பிரதேச சபையின் "நல்லை தீபம்" சஞ்சிகை வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் பஞ்சலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் மே.காந்தசீலனும், கௌரவ விருந்தினர்களாக சபை உறுப்பினர் த.துரைமணி, கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர். வீ.ஞானகாந்தன் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட தலைவர் திருமதி.க. சந்திரசேகர், யாழ்.பல்கலைக்கழக வினை முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, திருநெல்வேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திருமதி. த.சித்திரா உப்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வின் போது பிரதேச சபை உத்தியோகத்தர்களிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றீயீட்டியவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெறவுள்ளது.

அத்துடன் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு, உள்ளூராட்சி வார நிகழ்வு ஆகியனவும் நடைபெவுள்ளன. நீன்றியுரையை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சி.கயல்விழி வழங்குவார் (137)

## உடுவில் முத்தட்டு வீதிக்கு விமோசனம் எப்போது?

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட உடுவில் முத்தட்டு வீதியை புனரமைப்பு செயவதற்கு வழிவகை உண்டா என அவ்வீதியால் பயணிப்போர் கேள்வியெழுப்புகின்றனர்.

இரண்டு பக்கமும் தோட்டங்களை உடைய இவ்வீதி மிகவும் சீர்கெட்டு குண்டும் குழியுமாக உள்ளதுடன் போக்குவரத்து செய்ய முடியாத அவலநிலையிலுமுள்ளது. தற்போது மழை காலமென்பதால் வீதியில் உண்டான குழிகளில் வெள்ளநீர் தேங்கியுமுள்ளது.

பெருமளவில் விவசாயிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் இவ்வீதியை புனரமைப்பதற்கு வலி.தெற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுக்குமா என அவ்வீதியில் பயணிப்போர் கேள்வி எழுப்புகின்றனர்.

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையில் ஒளிவிழா எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியில் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு புனித சவேரியார்-தேவாலயத்தைச் சேர்ந்த பங்குத்தந்தை தலைமை தாங்கி ஆராதனைகளை நடாத்தவுள்ளார்.

இவ் ஒளிவிழாவில் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு தவிசாளர் அழைப்பு விடுத்துள்ளார். (137)



ஜே/86, கிராம அலுவலர் பிரிவிலுள்ள பற்றைக்காடு களாகவுள்ள காணிகளில் சிரமதானப்பணி இடம் பெறுவதைக் காணலாம். (105)

# ஆயுர்வேதம்

## கண்ணுக்கு வலிமை



உறுப்புகளில் புலன்களும், புலன்களில் கண்களும் முக்கியத்துவம் பெற்றவை. கண்களின் பார்வை குன்றாமல் எளிதில் அயர்வு அடையாமல் இருக்க உபாயங்களை இதோ ஒரு பாட்டு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.

தின்னார் பண்ணைச் சிறுகீரை
தின்ன மறந்தோர் சீர்கேடாய்
பொன்னாங்காணிக் கறிகூட்டார்
பூசார்பாதம் நெய்யுண்ணார்
பண்ணார் மதியந்தனைப் பாரார்
பால்வார்த்துண்ணார் பல்தேயார்
கண்ணோ வதனால் கவல்வரதை
யாமும் சொல்லக் கடவோமே.

பண்ணைக்கீரை சிறுகீரை இவற்றைத் தினமும் சாப்பிடுதல், பொன்னாங்கண்ணிக் கீரையைப் புளி சேர்க்காமல் சமைத்துச் சாப்பிடுதல், இரவு நேரங்களில் இரு உள்ளங்கால்களிலும் பசுவின் நெய்யைத் தேய்த்துக் கொள்ளுதல், இதை தளமிடுதல் என்பர். உணவில் நெய் சேர்த்துக்கொள்ளுதல், பௌர்ணமியன்று இரவில் சந்திரனை வெகுநேரம் பார்த்துக் கொண்டிருத்தல், இரவு நேரத்தில் பால் கலந்த அன்னத்தைச் சாப்பிடுதல், பற்களை முறைப்படி துலக்குதல் இம்முறையைப் பின்பற்றுபவர்களுக்கு கண் நோய்கள் வராது. அவ்விதம் நடக்காதவர்களுக்கு கண் நோய்கள் தாமே வந்தடையும் என்கிறது இந்த பாட்டு.

Epiphora என்றால் கண்ணீர் வடிதல் என்று பொருள். கண்ணீர் உருவாகும் Lacrimal glands பகுதியில் உருவாகும் கண்ணீரானது கண்களுக்கு வந்து சேரும் பாதையில் அடைப்பு ஏற்பட்டால் இந்தப் பிரச்சினை உருவாகும். கண் பொங்கும்.

கண்ணுக்கு எண்ணெய்ப் பசையைக் கொடுத்து ஊட்டச் சத்தையும் ஏற்படுத்தி தூசி மற்றும் துகள்களில் இருந்து கண்ணைப் பாதுகாப்பதே கண்ணீருடைய முக்கிய செயலாகும்.

எட்டு வினாடிகளுக்கு ஒருமுறை சராசரியாக மனிதன் கண்ணை மூடித் திறக்கிறான். அதுசமயம் கண்ணீரானது கண் முழுவதும் பரவி கண் பாதுகாக்கப்படுகிறது. மன அழுத்தம் ஏற்பட்டாலோ உணர்ச்சிகளின் கொந்தளிப்பினாலோ கண்ணீர் அதிகமாகச் சுரக்கும்.

இதுபோன்ற உபாதையில் ஆஸ்சோதனம் எனும் கண்ணுக்கு சொட்டு மருந்துவிடும் சிகிச்சை முறையையும், அஞ்சனம் எனும் கண்ணுக்கு மையெழுதும் சிகிச்சையையும் ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது.

ஆஸ்சோதனம் எனும் சிகிச்சைமுறையில் கண் உபாதையுள்ள வரைப் படுக்க வைத்து பிறகு மூலிகைக் கஷாயங்களை நன்றாகக் குளிரச் செய்து கண்களைக் கழுவவேண்டும். இதற்கு த்ரிபலா கஷாயம், மர மஞ்சள் கஷாயம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

கண்ணில் ஏற்படும் அழுத்தத்தினால் கண்ணீர் பொங்கி வெளிவரும். Glaucoma எனும் உபாதை குறைப்பதற்கு முருங்கை இலைச் சாற்றை கண்ணில் விடுவதற்காகப் பயன்படுத்தலாம்.

கப-பித்த-ரத்த உபாதைகளால் கண் கெடும் பொழுது மை இடு வதன் மூலம் கண் தெளிவு பெறுகிறது. பார்வைத் திறன் அதிகரிக்கிறது. கண்களைக் கழுவிய பிறகு கண்ணுக்கு மை இடுதல் சிகிச்சை சிறந்ததாகும்.

கரிசிலாங்கண்ணியின் இலைகளை நன்றாகக் கழுவி சாறு பிழிந்து, அதில் ஒரு சிறுவெள்ளைத் துணியை முக்கி நிழலில் உலர்த்த வேண்டும். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று முறை இவ்வாறு செய்து துணியை நன்றாகச் சுருட்டி பசு நெய்யில் முக்கி எடுத்து விளக்கில் பற்ற வைத்து எரித்து கரியாக்க வேண்டும். அதில் நெய் சேர்த்துக் குழைத்து ஒரு கிண்ணத்தில் பத்திரப்படுத்தி அதைக் கண் மையாகப் பயன்படுத்தலாம்.

இதுபோலவே தான்றிக்காய் சூரணத்தையும் மஞ்சளையும் கரியாக்கி தயாரிப்பதும் உண்டு. சில மூலிகை மருந்துகளை விழுது போல் அரைத்து கண்ணைமூடி, கண்ணைச் சுற்றி வைத்து கண் இமைகளில் படாமல் கட்டுவதற்கு பிடாலகம் என்று பெயர்.

அதனால் இந்த ஆஸ்சோதனம், அஞ்சனம், பிடாலகம் போன்ற கண் சிகிச்சை முறைகள் நல்ல பலனைத் தரக்கூடும். ஆயுர்வேத மருத்துவமனைகளில் இந்த சிகிச்சைமுறைகளை நன்றாகச் செய்கிறார்கள்.

த்ரிபலா சூரணத்தை சுமார் அரை ஸ்பூன் எடுத்து ஒன்றரை ஸ்பூன் பசு நெய் குழைத்து நான்கு சொட்டு தேனுடன் கலந்து இரவில் படுக்கும் முன் சாப்பிடுவதன் மூலமாக கண்ணில் ஏற்படும் அதிக கண்ணீர் ஒழுகுதல், கண் பொங்குதல் போன்ற பிரச்சினைகள் நன்றாகக் குறையும்.

# 145 மில்.பவுன்ஸ்கள் வெள்ளையடிப்பு தமிழ் தம்பதிக்கு லண்டலில் 19 வருட சிறை

(கொழும்பு)

**லண்டனில் வசித்து வரும் தமிழ் தம்பதிகள், 145 மில்லியன் பவுன்ஸ்களை வெள்ளையடித்து இறுதியில் டாக்ஸ் ஆபீசிடம் சிக்கிக்கொண்டார்கள். இவர்கள் இருவருக்கும் 19 வருட சிறைத்தண்டனையை நீதிபதி வழங்கியுள்ளார்**

ல்ண்டனில் உள்ள பிரபலமான ஆக்ஸ்பேட் வீதியில் மேலும் 2 இடங்களில் பணமாற்று சேவை நிலையத்தை வைத்து நடாத்தி வந்துள்ளார் மூத்ததம்பி சிறீஸ்கந்தராஜா. இவரது மனைவியின் பெயர் திலகேஸ்வரி.

இவர்கள் இருவரும் லண்டனில் உள்ள பெரும் கிரிமினல் குழுக்களிடம் பணத்தை பெற்று அதனை ஐரோப்பாவில் உள்ள நாடுகளுக்கு அனுப்புவதும், பின்னர் அதனை மீண்டும் லண்டனுக்கு அனுப்பி அந்த கறுப்பு பணத்தை வெள்ளையடிப்பதில் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

லண்டன் மத்திய நகரில் உள்ள ஹரட்ஸ் என்னும் உயர் தரக் கடைகளில் காணப்படும் லொக்கர்களை இவர்கள் பயன்படுத்தி அதில் பணத்தை பதுக்கிவைப்பது வழக்கம். பின்னர் அதனை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி , மீண்டும் அதனை லண்டனுக்குள் வங்கி மூலம் கொண்டுவந்துள்ளார்கள்.

இதனால் காசு வெள்ளையடிக்கப்படுகிறது (அதாவது உத்தியோகபூவர் காசாக மாறுகிறது) இப்படியாக இவர்கள் மொத்தம் 145 மில்லியன் பவுன்ஸ்களை வெள்ளையடித்து கொடுத்து, அதற்காக பெரும் பணத்தை தமது பங்காகப் பெற்றுள்ளார்கள்.

குறித்த தமிழர்களது நிறுவனத்தில் இருந்து பெரும் பணம், ஐரோப்பிய நாடுகள் செல்வதும். பின்னர் அவை மீண்டும் லண்டனுக்குள் வருவதையும் அவதானித்த வரு வாய்த்துறை அதிகாரிகள். மாறுவேடத்தில் இந்த தம்பதிகளை அவதானிக்க ஆரம்பித்து விட்டார்கள்.





இவர்கள் இருவரும் சகோதரிகளான மார்லின் மற்றும் லூசியா ஆகிய பெண்களை வைத்து, பெரும் பணத்தை ஐரோப்பாவுக்கு கடத்துவதை அதிகாரிகள் எப்படியோ மோப்பம்பிடித்து விட்டார்கள்.

அவர்களைப் பின் தொடர்ந்த அதிகாரிகள், முதலில் மார்லீனை மடக்கிப் பிடிக்க அவரிடம் பணமாக 90 ஆயிரம் பவுன்சுகள் (90 லட்சம் இந்திய ரூபாய்) இருந்துள்ளது. மேலும் லூசியாவை மடக்கிப் பிடித்தவேளை அவரிடம் மட்டும் 30 ஆயிரம் பவுன்ஸ்கள் இருந்துள்ளன.

பின்னர் அனைத்தையும் விசாரித்து அறிந்துகொண்ட அதிகாரிகள், பொலிஸாரின் உதவியோடு சென்று சிறீஸ்கந்தராஜாவையும் மனைவியையும் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்திவிட்டார்கள்.

இவர்கள் இருவருக்குமாக 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

## மத்தள கடனை அடைக்கும் காலம் எவ்வளவு விளக்கமளிக்கிறார் சம்பிக்க



மத்தள விமான நிலையத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடனைச் செலுத்த 1,40,000 வருடங்கள் தேவைப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பிட்டகோட்டேவில் அமைந்துள்ள சொலிஸ் ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்தின் வருமானம் 16000 ரூபாவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்தள விமான நிலையத்தினை அமைப்பதற்காக 27000 மில்லியன் ரூபா பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.மனித குலம் தோன்றி 143000 ஆண்டுகள் கடந்துள்ளதாகவும் அந்தளவு காலத்திற்கு இலங்கையர்களை கடன்காரர்களாக அரசாங்கம் மாற்றியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடும்ப நலனை கருத்திற்கொண்டே மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## உதய கம்மன்பிலவின் புதிய கட்சி உதயம்



ஜாதிக ஹெல உறுமய கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு அளித்துள்ள மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில "பிவிதுரு ஹெல உறுமய என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை தொடங்கியுள்ளார்.

இந்தக் கட்சியின் சின்னம் தாமரை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் பிரதி பொதுச் செயலாளராக இருந்த கம்மன்பில கடந்த 11ஆம் திகதி விலகி ஜனாதிபதிக்கு ஆதரவு அளித்திருந்தார.

எனினும் ஜாதிக ஹெல உறுமய மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு தெரிவித்து நல்லாட்சியை ஏற்படுத்தி ஊழல் மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவென தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

## வளிமண்டலத்தில் தளம்பல் காற்றுடன் மழை தொடரும்

(கொழும்பு)

நாட்டைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் தளம்பல் நிலை ஏற்பட்டதன் காரணமாக மழையுடனான காலநிலை, எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கக்கூடும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.


குறிப்பாக இடியுடனான காலநிலையின் போது கடும் காற்று வீசும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாதாரண காலநிலை காரணமாக 7 மாவட்டங்களில் 1 இலட்சத்து 24 ஆயிரத்து 369 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 52 ஆயிரத்து 960 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மாத்தளை, அனுராதபுரம், பொலநறுவை, வவுனியா, புத்தளம், மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மின்னேரிய நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டின் ஒரு பகுதி உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அதன் தாழ்நிலங்களில் வசிக்கும் மக்களை



அங்கிருந்து அகன்று செல்லுமாறு பொலனறுவை நீர்ப்பாசன பொறியிலாளர் காரியாலயம் அறிவித்துள்ளது.

நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டை பாதுகாக்கும் நோக்கில் தற்போது மணல் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளதாக, காரியாலயத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, மின்னேரிய நீர்த்தேக்கத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனுராதபுரம், மல்வத்துஓயா ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் அவசர கதவுகள திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குளக்கரையில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. மொஹமட் ரியாஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு புதிய தூதுவர்




இலங்கைக்கான புதிய தூதுவராக, ஜேம்ஸ் டோறிஸ், நியமிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவராகப் பணியாற்றும், ஜோன் ரன்கின், மற்றொரு இராஜதந்திரப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதையடுத்தே, புதிய தூதுவராக, ஜேம்ஸ் டோறிசின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

புதிய தூதுவர் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தமது பணிக்ளைப் பொறுப்பேற்பார் என்று, பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்தில் இணைந்த, ஜேம்ஸ் டோறிஸ், பெருவில் 4 ஆண்டுகள் தூதுவராகப் பணியாற்றியவர்.

மேலும், ரஷ்யா, கொலம்பியா ஆகிய நாடுகளில் உள்ள பிரித்தானிய தூதரகத்தில் பணியாற்றிய அனுபவம் உள்ள இவர், பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்தில், ஆசிய மற்றும் ஐரோப்பிய விவகாரங்களுக்கான பிரிவிலும் கடமையாற்றியுள்ளார்.

## கட்சி பேதமின்றி பாப்பரசரை அனைவரும் வரவேற்க வேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு

கட்சி பேதமின்றி பரிசுத்த பாப்பரசரை வரவேற்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என பேராயர் பேரருட்திரு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உலகத்திற்கு ஒரு பாப்பரசரே உள்ளார். அதிகமானோர் இல்லை. அவரை இலங்கைகக்கு அழைக்க விருப்பம் பெற்றோம். யன்னலின் ஊடாக முகத்தை காண்பிப்பதற்கு முன்னதாகவே நாங்கள் விருப்பத்தைப் பெற்றோம். அவர் தெரிவானதன் பின்னர் அந்த தேவாலயத்தின் யன்னல் ஊடாக மக்களுக்கு உரையாற்றினார்.

அதற்கு முன்னரே இலங்கைக்கு வருமாறு நான் அழைத்தேன். பல எதிர் பார்ப்புகளுக்கு மத்தியில்தான் நான் அந்த அழைப்பை விடுத்தேன். அதன் போது அவர் இணக்கம் தெரிவித்தார்.

எனவே அவரின் விஜயத்தை தேர் தலுக்காக இல்லாதொழித்துக்கொள்ள வேண்டிய தேவை கிடையாது.

ஆசியாவில் உள்ள சிறிய நாடு இது. பாப்பரசர் ஒருவர் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்தமை எமக்கு மிகப்



பெரிய ஆசீர்வாதம் ஆகும். ஆகவே நாம் அவரை வரவேற்கத் தயாராக வேண்டும். யார் வெற்றி பெற்றாலும் எமக்கு பிரச்சினை இல்லை. ஆனால் பாப்பரசரை வரவேற்க வேண்டும்.


வெற்றி பெறுபவர்களும் தோல்வியடைபவர்களும் நாமும் ஒன்றிணைந்து வரவேற்பளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்

## தங்கம் கடத்தியவர் இந்தியாவில் கைது



சுமார் 1.5 கிலோகிராம் தங்கத்தை வைத்திருந்ததாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவரை இந்தியாவின் நெடும்பாசறி விமான நிலையத்தில் நேற்று முன்தினம் சுங்கத்திணைக்களத்தின் 'விமான புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துளளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஏயார்லைன்ஸ் விமானத்தில் சென்ற 78 வயதான இவர், தங்கத்தை தனது சேலையினுள் மறைத்து வைத்திருந்துள்ளார். 3 தங்கச் சங்கிலிகள், மோதிரங்கள் உள்ளிட்டவற்றை இவர் மறைத்து வைத்திருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

32. 
நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?
1) $\frac{1}{2}$ 2) $\frac{3}{5}$ 3) $\frac{1}{4}$

◆ நகரம் Aஇல் இருந்து நகரம் Bஇற்கான தூரம் 180km ஆகும். A நகரில் இருந்து மு.ப. 8மணிக்கு புறப்பட்ட பேருந்து ஒன்று மணிக்கு 40km வேகத்தில் Bஐ நோக்கிச் செல்கின்றது. அதே நேரத்தில் B நகரத்தில் இருந்து புறப்பட்ட கார் ஒன்று மணிக்கு 50km வேகத்தில் Aஐ நோக்கிச் செல்கிறது

33. பேருந்தும் காரும் Bயில் இருந்து எத்தனை km தூரத்தில் சந்தித்திருக்கும்?
1) 80km தூரத்தில் 2) 90Km தூரத்தில் 3) 100Km தூரத்தில்

34. பேருந்தும், காரும் சந்திக்கும் போது நேரம் யாது?
1) மு.ப.8மணி 2) மு.ப.7மணி 3) மு.ப.9மணி

35. பாடசாலைகளில் ஒரு ஆண்டில் அதிக தடவை இடம்பெறக்கூடியவை
1) தவணைப்பரீட்சைகள் 2) பரிசளிப்புவிழாக்கள் 3) இல்லவிளையாட்டுப்போட்டிகள்

36. கரன் 180cm நீளமான கம்பித்துண்டு ஒன்றை சரிபாதியாக வெட்டி அதில் ஒருதுண்டை பயன்படுத்தி அகலத்தை போல் இருமடங்கு நீளமான செவ்வகம் ஒன்றை அமைத்தான். அந்த செவ்வகத்தின் ஒரு பக்க நீளம் யாது?
1) 15cm 2) 45cm 3) 30cm

37. தக்கதருணத்தில் உதவுதல் என்பதற்கு பொருத்தமான உவமைத்தொடர்
1) உடுக்கை இழந்தவன் கை போல
2) காலத்தில் பெய்த மழைபோல
3) அத்தி பூத்தாற் போல

38. வினைச்சொல்லை பயனிலையாக கொண்ட வாக்கியத்தை தெரிவு செய்க
1) அவன் ஒரு பாடகன்
2) அவர்கள் என்னை கூப்பிட்டார்கள்
3) அவள் சிறந்த எழுத்தாளர்

◆ 39 தொடக்கம் 42 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக

39. வாய்க்கால் என்பதை DWKVL என எழுதலாம் எனின் கால்வாய் என்பதை எவ்வாறு எழுதலாம்?
..........................................................

40. கடிதம் + விம்பம் = தம்பம்
வடிவம் + திவசம் = வம்சம் - எனின்
மலர்மாலை + திருமதி = ..............

41. 9பேர் 8 நாட்களில் செய்து முடிக்கக்கூடிய வேலையை 6பேர் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
..........................................................

42. இலங்கை நேரப்படி மு.ப.8.30மணிக்கு இலங்கையில் இருந்து புறப்பட்ட விமானம் லண்டன் நேரப்படி பி.ப1.30 மணிக்கு லண்டனைச் சென்றடைந்தது. இலங்கை நேரம் மு.ப.10மணியாகும். போது லண்டன் நேரம் மு.ப 6மணியாகும் விமானம் பயணத்திற்கு எடுத்த நேரம் யாது?
..........................................................

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1).III | (2).I | (3).II | (4).III | (5).II | (6).III | (7).I | (8).I | (9).I | (10).III |
| (11).III | (12).III | (13).III | (14).III | (15).II | (16).III | (17).9 | (18).II | (19).III | (20).III |
| (21).III | (22).II | (23).III | (24).II | (25).A | (26).C | (27).D | (28).III | (29).II | (30).III |

இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
45 நிமிடம்

# கல்வி முரசு



1 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

◆ 1ஆம், 2ஆம் வினாக்களுக்கு ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொல்லிற்கு ஏற்ப சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையை தெரிவு செய்க

01. A - தங்கை B - செய்தாள் C - பாடங்களை D - எனது E - ஆயத்தம்
1) D,C,A,E,B 2) D,A,C,E,B 3) E,B,D,A,C

02. A - புறப்பட B - நாங்கள் C - வந்ததும் D - கொழும்புக்கு E - நீங்கள் F - தயாராகுங்கள்
1) EDCBFA 2) DBCEFA 3) BDCEAF


◆ தரப்பட்ட கவிதையைக் கொண்டு விடை தருக

ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே - பகல்
கூட்டினில் உறங்குவாயோ வெண்ணிலாவே
ஆழியும் நீ வரக்கண்டு வெண்ணிலாவே - குதித்து
ஆடுவதேக் காரணமோ? வெண்ணிலாவே

03. நிலவை ஆந்தைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுவது ஏனெனில்
1) வளர்ந்து பின் தேய்வதால் 2) பகல்வானில் தென்படாதால் 3) இரவு வானில் தென்படுவதால்

04. நிலவின் வரவைக்கண்டு குதித்தாடுவது எது?
1) கடல் 2) பறவைகள் 3) மலர்

05. கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவை தெரிவு செய்க





06. 9 கொய்யாப்பழங்கள் வாங்கத்தேவையான பணம் ரூபா 15 எனின் 24 கொய்யாப்பழங்கள் வாங்கத் தேவையான பணத்தொகை யாது?
1) 32.00 2) 36.00 3) 40.00

07. A பெட்டியில் இருந்த பந்துக்களின் அரைவாசி B பெட்டியில் இருந்தன. B பெட்டியில் இருந்த பந்துக்களின் அரைவாசி C பெட்டியில் இருந்தன. 3 பெட்டிகளிலும் உள்ள பந்துக்களின் மொத்த எண்ணிக்கை 49 எனின் B பெட்டியில் இருந்த பந்துக்களின் எண்ணிக்கை யாது?
1) 14 2) 21 3) 16

08. முச்சக்கரவண்டி 30km தூரம் ஓடும் போது பேருந்து 50km ஓடும். பேருந்து 40km ஓடும் போது மோட்டார் சைக்கிள் 50km ஓடும். அதன்படி மிகவேகமாக செல்லும் வாகனம் எது?
1) முச்சக்கரவண்டி 2) பேருந்து 3) மோட்டார் சைக்கிள்

09. நீர்தாங்கி ஒன்றின் கொள்ளளவு 100l ஆகும். நீர்தாங்கியில் ஒவ்வொரு நிமிடத்திலும் 10l நீர் நிறைகின்ற போது 5l நீர் வெளியேற்றப்படுகின்றது. எனின் அத்தொட்டி முதன்முதலாக எத்தனை நிமிடத்தில் முழுமையாக நிரம்பும்?
1) 20 நிமிடத்தில் 2) 19 நிமிடத்தில் 3) 25 நிமிடத்தில்

10. முதலில் தரப்பட்ட இரண்டு உருக்களையும் இணைக்கும் போது தோன்றும் உருவை தெரிவு செய்க





11. 'காகம் திட்டி மாடு சாகாது'என்ற பழமொழியின் கருத்து?
1) நற்புகழ் மங்குவதில்லை 2) பழிக்கு பயப்படாதே 3) காலம் தவறேல்

12. வீதிஅபிவிருத்தி பணி ஒன்று இருகட்டங்களில் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. முதல்கட்டத்திற்கு 8 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 10 மாதங்களும் எடுக்கின்றன. வீதி அபிவிருத்தி பணிகள் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டால் எந்த ஆண்டில் அபிவிருத்தி பணி முடிவடையும்?
1) 2014 ஆம் ஆண்டு 2) 2013 ஆம் ஆண்டு 3) 2015 ஆம் ஆண்டு

13. மணிக்கு 60km மாறா வேகத்தில் செல்லும் புகையிரதம் ஒன்று 2மணி 30நிமிடத்தில் செல்லும் தூரம் யாது?
150km 2) 165km 3) 135km

14.





A,B,C,D நான்கு வட்டங்களுக்கும் பொதுவான இலக்கம் எது?
1) 5
2) 4
3) 6

15. அமீனுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை கிடைக்கும். தாமுவுக்கு ஒன்றுவிட்ட ஒருநாள் விடுமுறை கிடைக்கும். இன்று மேமாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைத்தது. எனின் மீண்டும் எத்தனையாம் திகதி இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்?
1) 10ஆம் திகதி 2) 17ஆம் திகதி 3) 24ஆம் திகதி


16. சொற்களில் தொடர்பினை கவனித்து இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிந்து கோடிடுக?
வசனம் - வனம்
தகரம் - தரம்
பருந்து - ..........
1) மருந்து 2) பந்து 3) பருகு

17.




தரப்பட்ட இரு தளவடிவங்களிலும் உள்ள சமச்சீர் அச்சுக்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 4 2) 6 3) 8

18. சுற்றளவில் வேறுபடுகின்ற உருவின் கீழ் கோடிடுக




◆ சிலபழங்களின் விலைகளுக்கிடையிலான தொடர்பு தரப்பட்டுள்ளது

19.




ஒரு அன்னாசி வாங்கும் விலைக்கு எத்தனை வாழைப்பழம் வாங்கலாம்?
1) 28
2) 32
3) 24

20. வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக
1) கலைகலை 2) பெரியபெரிய 3) வரிசைவரிசை



◆ கீழே கட்டங்களில் உள்ள சொற்களை வைத்து 21ஆம்,22ஆம் வினாக்களுக்கு விடை தருக

| | | | |
|---|---|---|---|
| சிறுவர்கள் | வானம் | போக்குவரத்து | காப்போம் |
| வெள்ளம் | நாட்டி | நோக்கிச் | காணப்பட்டது |
| காலையில் | மைதானம் | கானம் | தடைப்பட்டுள்ளது |
| மரங்கள் | பறவைகள் | செக்கச்சிவந்து | சென்றனர் |
| மேற்கு | பாய்வதால் | மண்வளம் | இசைத்தன |

21. இங்குள்ள சொற்களைக் கொண்டு ஆக்கப்பட்ட வாக்கியம் எது?
1) காலையில் குருவிகள் கானம் இசைத்தன.
2) வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.
3) மரங்கள் நாட்டி மண்வளம் பேணுவோம்.

22. இங்குள்ள சொற்களைக் கொண்டு அமைக்கப்படாத வாக்கியம் எது?
1) வெள்ளம் எங்கும் பரந்து காணப்பட்டது.
2) சிறுவர்கள் மைதானம் நோக்கிச் சென்றனர்.
3) மேற்கு வானம் செக்கச்சிவந்து காணப்பட்டது.

23. கீழே தரப்பட்ட எண்தொடரில் A,B கட்டத்தினுள் வரவேண்டிய எண்கள் எவை?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 2 | 8 | 5 | A | 7 | 12 |
| 6 | 3 | 9 | 3 | 6 | 9 | 6 | B |

1) 5,4 2) 3,6 3) 4,4

24. 5l எண்ணெய் 10சிறிய போத்தல்களில் ஊற்றப்பட்டது. எனின் ஒரு சிறிய போத்தலில் உள்ள எண்ணெய்யின் அளவு யாது?
1) 5.0l 2) 0.5l 3) 0.05l

25. கறுப்புப்பூனை மெதுவாகப் பதுங்கிய சிறிய எலியை துரத்திப்பிடித்தது. இந்த வாக்கியத்தில் உள்ள அடைமொழிகளின் எண்ணிக்கை யாது?
1) 3 2) 4 3) 6

◆ சில பொருட்களின் விலைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன

| 1kg பயறு+ 250g பருப்பு | 2kg பயறு + 1kg மா | 250g பருப்பு + 500g மா |
|---|---|---|
| 125.00 | 236.00 | 85.00 |

26. 1kg பயறும் 500g மாவும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?
1) 118.00 2) 125.00 3) 132.00

27. 1kg பருப்பு வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?
1) 160.00 2) 180.00 3) 190.00

28. 1kg கேக் தயாரிப்பதற்கு 12 முட்டைகள் தேவை எனின், 54முட்டைகளை எத்தனை kg கேக் தயாரிப்பதற்கு பயன்படுத்தலாம்?
1) 4kg 2) 6.5kg 3) 4.5kg

◆ 29ஆம்,30ஆம் வினாக்களில் காரணம் முதலில் தரப்பட்டு விளைவு அதனைத் தொடர்ந்து வந்ததாயின் (T) எனவும் அவ்வாறு இல்லை எனின் (P ) எனவும் அடைப்பினுள் எழுதுக

29. மரங்கள் அசைந்தன. காற்று வீசியது ( )

30. மரங்கள் வெட்டப்படுகின்றன. வரட்சி அதிகரிக்கின்றது ( )

31. இமானின் தந்தை சாருக்கானின் மகனாவார். எனின் இமான் சாருகானுக்கு என்ன உறவுமுறை?
1) பேரன்
2) பாட்டன்
3) மகன்

# சட்டவிரோத ஆயுதங்களை களைவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடடுள்ளவர்களின் சட்டவிரோத ஆயுதங்களைக் களைவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டைத் தடுக்கும் நோக்கில் பொ்லிஸ் நிலையங்களின் அடிப்படையில் தேடுதல் வேட்டைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் சிலரிடம் சட்ட்விரோத ஆயுதங்கள் பல இருப்பதாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் சட்டவிரோத ஆயுதங்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் உயிர்ப் பலிகளோ ஆயுத பயன்பாடோ இடம்பெறுவதனை தவிர்க்கும் வகையில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் பற்றி தேடுதல், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள் உண்டா என சோதித்தல், திடீர் சோதனைகளை நடாத்துதல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக காமினி நவரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.



நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரில் சவுக்கு வியாபாரம் களைகட்டியுள்ளது. பிரதான வீதியில் இவ்வாறு 50 ரூபா முதல் 100 ரூபா வரை விற்கப்படும் சவுக்கு மரங்களை பலரும் வாங்கிச் செல்வதைக் காணலாம்..

(படம்-ஆர். இராஜகுமார்)

# மகிந்த சிந்தனையை அடியொற்றி பாரிய அபிவிருத்தி திட்டங்கள்

## எவரும் விரல்நீட்ட முடியாது என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை அரசியல் வரலாற்றில் எவராலும் மறக்க முடியாத ஒன்றாக மட்டுமன்றி, முதன் முதலாக நாம் மஹிந்த சிந்தனையை அடியொற்றி பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டுமன்றி, கசினோ அனுமதிப் பத்திரத்தை வழங்காத சுத்தமான கைகள் தன்னுடையது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், மஹிந்த சிந்தனை உலகத்தை வெல்லும் வழி நேற்று வெளியிடப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புக்கள் நேற்று ஆரம்பமாகிய நிலையில் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது. அரசாங்க கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை முழுமையாக தெரிந்து கொள்ளாமலேயே அஞ்சல் மூல வாக்காளர்கள் தம்து வாக்குகளை அளிக்கவுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுமிருந்தது.



இந்த விஞ்ஞாபனம் நேற்று முற்பகல் 9 .30 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டபோதே இவ்வாறு தெரிவித்த அவர், அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களாக மரண பயத்தோடு வாழ்ந்த பொதுமக்களின் அச்சத்தை இன்று நாம் நீக்கியுள்ளோம். புலிகளை அழித்து நாட்டுக்கு சுதந்திரத்தை ஈட்டிக்கொடுத்த என்னை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த விழைகிறார்கள். அதற்கு இடம் கொடுக்க முடியாது.

மட்டுமன்றி, நாம் நாட்டைச் சூறையாடியவர்கள் என்று எவராலும் எம்மை நோக்கி விரல் நீட்ட முடியாது. நாட்டுக்கு எதிராக எந்தவோர் ஒப்பந்தத்திலும் நான் இதுவரை கையெழுத்திட்டதும் கிடையாது. எனது ஒரே ஒப்பந்தம் இந்த மஹிந்த சிந்தனைதான்.

இதன்மூலம்தான் என்னால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடிந்தது. 1200 அமெரிக்க டொலர்களாக இருந்த தனிநபர் வருமானத்தை 4000 டொலர்களாக அதிகரிக்க முடிந்தது. மின்சார உற்பத்தியை 98 வீதம் அதிகரிக்க முடிந்தது. ஆக, நாட்டை அபிவிருத்தி செய்யும் சக்தி எம்மிடம் உள்ளது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# புனித யாத்திரையாக ஐயப்ப விரத யாத்திரை

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி பக்தர்களின் வருடாந்த விரத யாத்திரையினை புனித யாத்திரையாக அங்கீகரித்து அரசாங்கம அறிவித்துள்ளது.

பிரதியமைச்சர் பிரபா கணேச னிடம், ஐயப்பா சுவாமி பக்தர்கள் தமது சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாக அங்கீகரிக்க ஜனாதிபதியிடம் வேண்டு கோளை முன்வைக்குமாறு கோரியிருந்தனர்.

அதற்கமைய, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ சபரிமலை யாத்திரையினை புனித யாத்திரையாக அங்கீகரித்துள்ளதாக புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

# ரணில் மைத்திரி இடையே உடன்படிக்கை உள்ளதா?

## முற்றாக மறுக்கிறார் மங்கள

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐதேக தலைவர் ரணில விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டதாக வெளியிடப்பட்ட இரகசிய உடன்பாட்டு ஆவணம், போலியானது என்று ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்பாட்டின் பிரதி என்று கூறி, ஐதேகவின் முன்னாள் பொதுச்செயலரும், தற்போதைய சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்க ஆவணம் ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தார்.

அந்த ஆவணம் பொய்யானது என்றும், அத்தநாயக்க காண்பித்த ஆவணத்தில் இடம் பெற்றுள்ள கையெழுத்துகள் போலியானவை என்றும் மங்கள சமரவீர, நேற்று முன்தினம் மாலை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதுதொடர்பர்க ஏற்கனவே தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கிராஞ்சி கிழக்கு அம்பன் முன்பள்ளியின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி கிழக்கு அம்பன் முன்பள்ளியின் அபிவிருத்திக்காக வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனால் வடமாகாண சபை நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இம்முன் பள்ளியின் அபிவிருத்திக்காக கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பிர் மு.சந்திரகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளநிலையில் அபிவிருத்திக்கு இந்நிதி போதாமல் உள்ளது என முன்பள்ளிச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மேலும் 3 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் தற்போது இம்முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்று புதிதாக கட்டப்பட்ட நிலையில் கட்டடப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப பிரதேசத்திலுள்ள சிறார்கள் முன்னர் 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள முன்பள்ளிக்கு சென்று கல்வி கற்றுவந்த நிலையில் தற்போது முன்பள்ளி மாணவர்கள் இணைந்து சிரமமற்ற கல்வியை முன்னெடுக்க வழி யேற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (36)




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்



ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றைய தினம் இடம்பெற்ற வேளை-யாழ்ப்பாணத்திலும் அரச ஊழியரான பெண்ணொருவர் வாக்களிப்பதனைக் காணலாம்.

### அமெரிக்க வான்வழி தாக்குதலில்

# தரைமட்டமானது ஐ.எஸ்.ஐ.எஸ். தளம்



அமெரிக்கா நடாத்திய வான் வழி தாக்குதலில், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் வசிப்பிடங்கள் தரைமட்டமாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி, இஸலாமிய ராஜ்ஜியத்தை அமைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள தொடர்ந்து தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகள் ஈடுபட்டுள்ளன. அமெரிக்கா போர் விமானங்கள் மூலமாக வான் வழி தாக்குதல் நடாத்தி வருகிறது.

இந்த நிலையில், ஈராக் மற்றும் சிரியாவில் தற்போது 16 முறை வான்வழித் தாக்குதல் நடாத்தி இருப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஈராக்கின் வடக்குப் பகுதியில் சின்ஜார் அருகே 4 முறை போர் விமானங்கள் மூலம் வெடி குண்டுகள் மூலம் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசிப்பிடங்கள், வாகனங்கள், போர்த் தளபாடங்கள் அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன.

தால்அப்கார், ரமாடி, மொசூல், பாய்ஜி ஆகிய நகரங்களையும் குறி வைத்து தாக்குதல் நடாத்தபபட்டது. சிரியாவில் துர்கிஷ் எல் லைப்பகுதியில் உள்ள கோபானி நகர் அருகே 3 முறை தாக்குதல நடாத்தப்பட்டது என்று கூறப்பட்டு உள்ளது.

### எபோலா பிணத்தால் பரவுகிறது



மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் உயிர்க்கொல்லி நோயான எபோலாவுக்கு ஏராளமானோர் பலியாகியுள்ளனர். சியாரா லியோனில் மட்டும் இதுவரை 2000 பேர் எபோலாவால் இறந்திருக்கின்றனர். இதில் 70 சதவீதத்தினர் பாதுகாப்பற்ற அடக்கம் செய்யும் முறையால் எபோலா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என்று வல்லுனர்கள் தெரிவித்தனர். பாரம்பரிய முறைப்படி அடக்கம் செய்பவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கும் அளவிற்கு இறுதிச்சடங்கு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அந்த வகையில், சியாரா லியோனில் எபோலாவால் இறந்தவர்களின் உடல்களை இறுதிச்சடங்கின்போது உறவினர்கள் தொடுதல் அல்லது கழுவுதல் போன்ற பாரம்பரிய அடக்கம் செய்யும் முறைகளை கைவிட வேண்டும் என அரசு வலியுறுத்தி வருகிறது. உயிருடன் இருக்கும் மனிதரை விட இறந்த மனிதரிடமிருந்து எபோலா பரவ 10 மடங்கு அதிகம் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது இந்த நோயின் தாக்கம் செனகல் அமெரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் தெரிகிறது. உயிர்க்கொல்லி நோயான இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. கடந்த 20 ஆம் திகதி வரை எபோலா நோய்க்கு பலியானோர் எண்ணிக்கை 7,518 ஆக உயர்ந்துள்ளது. பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் 19,340 ஆக அதிகரித்துள்ளது.இந்த தகவலை உலக சுகாதார நிறுவனம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

### இஸ்ரேல் தாக்குதல்

# 630 பலஸ்தீனர்கள் எகிப்தில் தஞ்சம்



www.dinakaran.com

பலஸ்தீனத்தை ஒட்டியுள்ள எகிப்தின் ராபா எல்லை 2 நாட்கள் தற்காலிகமாக திறக்கப்பட்டது. இதனையடுத்து நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் காசா நகரில் உள்ள 630 பலஸ்தீனர்கள் எகிப்தில் தஞ்சம் புகுந்தனர். பலஸ்தீனத்தின் காசா நகரில் தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே அடிக்கடி ஏவுகணைத் தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது.

இதனால் காசா நகர மக்கள் பெரும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். காசா நகரில் புனரமைப்பு பணிகள் மேற்கொளளப்பட்டு வந்தாலும், இஸ்ரேல் இராணுவம் எந்நேரமும் தாக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்நிலையில், எகிப்தின் ராபா எல்லை கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் 2 நாட்களுக்கு தற்காலிகமாக திறக்கப்பட்டது.

இதனால் பலஸ்தீனத்தின் காசா நகர எல்லையில் இருந்து வெளியேற விரும்பும் மக்களின் கூட்டம் அலைமோதியது. நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மட்டும் 630 பலஸ்தீனிய மக்கள் எகிப்தில் தஞ்சம் புகுந்தனர்.

இதன்மூலம் வெளிநாட்டில் படிக்க விரும்பும் ஆயிரக்கணக்கான பலஸ்தீன மாணவர்களும் எகிப்து நாட்டில் தஞ்சம் அடையலாம் என்று எகிப்திய இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# உத்தரப் பிரதேசத்தில் கடும் குளிரால் 31 பேர் பலி



உத்தரப் பிரதேசத்தில் கடும் குளிர் நிலவுகிறது. கடும் குளிர் காரணமாக பள்ளிகளுக்கு டிசம்பர் 28 ஆம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் 8 பேரும் அலிகார், கான்பூர், மீரட் மொராதாபாத் உள்ளிட்ட இடங்களில் 14 பேரும் உயிரிழந்தனர். இதுவரை மொத்தில் கடும் குளிரில் சிக்கி 31 பேர் உயிரிழந்தனர். பனியின் காரணமாக 150 ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டன.

ஏயர் இந்தியா விமானம் 6 மணிநேரம் தாமதமாக இயக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மிகக் குறைந்த அளவாக 5 டிகிரி செல்ஸியஸ் வெப்ப நிலை இருந்தது. வாரணாசியில் 3.5 டிகிரி செல்ஸியஸும், மீரட்டில் 2.3 டிகிரி செல்சியஸும் முசாபர்நகரில் 2.5 டிகிரி செல்சியஸும் இருந்ததாகவும் இதே நிலை இன்னும் தொடரும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# மாயமான மலேசிய விமானத்தை சுட்டுவீழ்த்தியது அமெரிக்க இராணுவம்

### முன்னாள் ஏயார்லைன்ஸ் அதிகாரி தகவல்




மாயமான மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்தியது அமெரிக்க இராணுவம் என்று முன்னாள் ஏயார்லைன்ஸ் அதிகாரி மார்க் துகாய்ன் தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனாவின் பீஜிங் நகருக்கு புறப்பட்டுச் சென்ற மலேசியன் ஏயார்லைன்ஸ் விமான நிறுவனத்தைச் சேர்ந்த எம்.எச்.370 விமானம் கடந்த மார்ச் 8 ஆம் திகதி மாயமானது. கோலாலம்பூரில் இருந்து 239 பேருடன் பீஜிங் சென்றபோது மாயமான மலேசியா விமானம் எங்கேதான் போனது, என்னதான் ஆனது என்பது தெரியவில்லை.

இந்நிலையில், விமானத்தை தேடும் பணியில், அவுஸ்ரேலியா, சீனா மற்றும் மலேசியா நாட்டைச் சேர்ந்த மீட்புக் குழு ஈடுபட்டது. அதிலும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

தற்போது, மாயமான மலேசிய விமானத்தை அமெரிக்க இராணுவம் தான் சுட்டு வீழ்த்தியது என்றும், விமானம் கடத்தப்பட்டு தீவிரவாத தாக்குதலுக்கு பயன்படுத்தப்படலாம் என்ற அச்சத்தில் அமெரிக்க இராணுவம் விமானத்தை சுட்டு வீழ்த்தியது என்று ப்ரோடியஸ் ஏயார்லைன்ஸ் முன்னாள் தலைமை அதிகாரியும், எழுத்தாளருமான மார்க் துகாய்ன் தெரிவித்துள்ளார்.

எனவே விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு இது போன்ற தாக்குதலில் ஈடுபடுத்தப்படலாம் என்ற அச்சத்தில் அமெரிக்க இராணுவம் மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்திவிட்டது. அமெரிக்காவின் இராணுவ தளம் அமைந்துள்ள, இந்திய பெருங்கடலில் உள்ள டீகோ கார்சியா தீவு அருகே விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. விமானம் கடத்தப்பட்டது என்ற தகவலை அடுத்து இச்சம்பவம் நடந்துள்ளது.

மாயமான விமானம் மிகவும் தாழ்வான பகுதியில் பறந்ததை தாங்கள் கண்டதாக மாலைத்தீவு வாசிகள் என்னிடம் கூறினர். தீவில் வசிப்பவர்கள் பாராக் தீவு அருகே தண்ணீரில் காலியாக இருந்த தீ அணைப்பானை கண்டுபிடித்துள்ளனர் என்று மார்க் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் பா.ஜ.க ஆட்சி அமைக்கும்




ஜார்க்கண்ட காஷ்மீரில் பா.ஜ.க. வெற்றிபெற்று அட்சி அமைக்கும் என இந்தியாவின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட மாநிலத்தில் பா.ஜனதா வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் என்றும், காஷ்மீரில் பா.ஜனதா வெற்றி பெற்றாலும் பெரும்பான்மை கிடைக்காது என்றும் கருத்துக்கணிப்புகள் வெளியானது.

அதுபோலவே ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆட்சி அமைக்க தேவையான இடங்களில் பா.ஜனதா வெற்றி பெற்றுள்ளது. இன்னும், ஒரு இடம் மட்டுமே தேவைப்படுகிறது.எதிர்பார்த்தது போல காஷ்மீரில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. பா.ஜனதாவும் மக்கள் ஜனநாயகக் கட்சியும் சமபலத்துடன் வெற்றி பெற்று வருகின்றன. பா.ஜனதாவும், மக்கள் ஜனநாயக கட்சியும் தலா 23 தொகுதிகளில் முன்னணியில் உள்ளன. இதனால் காஷ்மீரில் தொங்கு சட்டசபை அமையும் நிலை ஏற்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் தொடர்கின்றன

## சளைக்காமல் பணிசெய்வோம்



தொடர்ந்தும் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதால் வடக்கு மக்கள் எப்போதும் அத்தியாவசிய தேவைகளையுடைய சமூகமாகவே வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட 66 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், வறட்சிக்கான நிவாரணங்களை வழங்கிக்கொண்டிருக்கும் சமகாலத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது. அதற்கான செயற்பாடுகளையும் நாம் மிகத் துரிதமாக முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். எமது மக்கள் தொடர்ச்சியாக அனர்த்தங்களுக்கு முகங் கொடுத்தவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நீண்டகாலமாக யுத்தத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து வந்த மக்கள் இன்று இயற்கையால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான சூழல்கள் மக்களை தொடர்ந்தும் தேவைகளுடன் வாழும் நிலையையே உருவாக்கி வருகின்றது. இவ்வாறான நிலையில் இருந்து மக்கள் மீள வேண்டுமாயின் மக்களின் வாழ்நிலைகள் மேம்பட வேண்டும் அதனடிப்படையிலேயே நாம் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் அதிக கரிசனை காட்டிவருகின்றோம்.

இதேவேளை கிராமமட்ட அமைப்புக்களை பலப்படுத்தி அதனூடாக மக்களின் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றோம் அதற்கமைவாக இன்று கிராம மட்ட அமைப்புக்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் ஒரு அங்கமாக தகரப்பந்தல்களையும் கதிரைகளையும் ஒலிபெருக்கிகளையும் கூட நாம் வழங்கி வருகின்றோம்.

இவ்வாறு மக்களின் அனைத்து தேவைகளையும் நாம் இனம்கண்டு ஒவ்வொன்றாக நிவர்த்தி செய்து வருகின்றோம். எனினும் இவை அனைத்துக்கும் பின்னால் மக்களின் உழைப்பும் செலுத்தப்பட வேண்டும் அப்போதுதான் வாழ்நிலை மேம்பாட்டை எட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் சிறு வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வருவோருக்கு தொழிலை மேம்படுத்துவதற்கான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. அதற்கமைவாக சுமார் 66 பயனாளிகள் நேற்று வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொண்டனர். இதேவேளை கிராம மட்ட அமைப்புக்களுக்கான தகரப்பந்தல் கதிரைகள் ஒலிபெருக்கிகள் உள்ளிட்ட பொருட்களும் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 22 கிராம மட்ட அமைப்புக்கள் இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து அமைப்புக்கள் இப்பொருட்களை பெற்றுக்கொண்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருக்கு வழங்கிய விசேட நிதியீட்டத்தின்கீழ் மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வாதார உதவித்திட்டத்தின் அடிப்படையிலேயே நேற்று முன்தினம் இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

கரைச்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் நாகேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# திஸ்ஸ மீது ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் வெளியிட்ட ஒப்பந்தத்தில் போலி கையொப்பம் இடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.



தமது கையொப்பத்தை போலியான முறையில் இட்டு சுகாதார அமைச்சர் அத்தநாயக்க போலி ஆவணமொன்றை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் தாம் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளதாக போலிப் பிரசாரம் செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்ட ஒப்பந்தத்தில் தமது கையொப்பம் போலியாக இடப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான எந்தவொரு ஆவணத்திலும் தாம் கையொப்பமிடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி தொடர்பில் விரிவான கிரமமான விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென சுகாதார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்பதை அவர் மீண்டும் நிரூபித்திருக்கின்றார். ஆகவே அவரைத் தமிழ் மக்கள் முழுமையாக ஆதரித்து வெற்றிபெறச் செய்யவேண்டும். அவரின் வெற்றியில் தமிழ் மக்களும் பங்காளர்கள் என்ற வலிமையான செய்தியை தென்னிலங்கைக்கு நாம் தெரிவிக்கவேண்டும்.

'உலகை வெல்லும் வழி'எனும் வரவேற்புக்குரிய தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் எமது கோரிக்கைகளையும், அதில் உள்ளடக்கப்பட்டிருக்காத எமக்குரிய விடயங்களையும் செய்து முடிப்பதற்கு நாம் அவரின் வெற்றியின் பங்காளிகளாவது அவசியமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்களுக்குத் தெளிவான வழியைக் காட்டத் தெரியாமல் இரகசியப் பேச்சுக்களையும், பொய்களையும் கூறி மக்களை ஏமாற்றும் போலி அரசியல்வாதிகளை இன்றைய யதார்த்தம் தோலுரித்து அம்பலப்படுத்தியிருக்கின்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், எமது மக்களுக்குச் சரியான பாதையினையே காட்டி வருகின்றோம். அதில் அழிவுகள் இல்லை. பொய்கள் இல்லை. அழிவு யுத்தம் ஏற்படுத்திய இழப்புக்களில் இருந்து விரைவாக மீண்டு ஏழுவதற்கும், எமது வாழ்விடங்களை முழுமையான அபிவிருத்தியால் தூக்கி நிறுத்துவதற்கும், கௌரவமான அரசியல் தீர்வை நடைமுறையில் பெறுவதற்கும் எமது முழுமையான அர்ப்பணிப்பைச் செய்து வருகின்றோம்.

ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நம்பிக்கையோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நாம் ஆதரவளித்து அவரது வெற்றியில் பங்காளிகளாவோம்.எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கே.பாலச்சந்தர்..

கன்னடம் என நான்கு மொழிகளிலும் திரைப்படங்களை இயக்கியுள்ளார். இந்தியாவில் திரைக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான தாதாசாகேப் பால்கே விருது அவருக்கு 2010ஆம் ஆண்டிலும், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் நாட்டின் நான்காவது உயரிய குடியியல் விருதான பத்மஶ்ரீ அவருக்கு 1987 ஆம் ஆண்டிலும் வழங்கப்பட்டது.

கே.பாலச்சந்தரின் இயக்கத்தில் வெளியான இரு கோடுகள், அபூர்வ ராகங்கள், தண்ணீர் தண்ணீர், அச்சமில்லை அச்சமில்லை, ஒரு வீடு இரு வாசல் மற்றும் ருத்ரவீணா ஆகிய திரைப்படங்கள் அவருக்கு தேசிய விருதுகளை பெற்றுத்தந்தது. அத்தோடு அவரது தயாரிப்பில் உருவான திரைப்படமான ரோஜாவும் அவருக்கு ஒரு தேசிய விருதை பெற்றுக் கொடுத்தது. இவை தவிர எண்ணற்ற மாநில அரசாங்க திரைத்துறை விருதுகளும், ஏனைய பிரபல விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

புகழ் பெற்ற இயக்குனர், தயாரிப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், நடிகர், மேடை நாடக இயக்குனர், தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளர் என்று அறியப்படும் இவருக்கு சென்னைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் சத்யபாமா பல்கலைக்கழகம் ஆகியவை கௌரவ முனைவர் பட்டங்களை வழங்கியுள்ளார்கள்.

திரையுலகத்தில் பிரபலமாக உள்ள நடிகர் கமல் உள்ளிட்ட பல்வேறு கலைஞர்களுக்கு சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுததுள்ள இவர், இதுவரை 48 நடிகர்களுக்கும், 42 நடிகைகளுக்கும், 10 தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் முதல் வாய்ப்பை அளித்துள்ளார். ஆசிய அளவில் அதிக ஊதியம் பெறும் நடிகர்கள் பட்டியலில் முன்னிலை வகிப்பவர் என்று அறியப்படும் ரஜினிகாந்த் இவரது இயக்கத்தில் அறிமுகம் செய்யப்பட்டவர். அதே போல் இரு ஆஸ்கார் விருதுகளை ஒரே சமயத்தில் குவித்த இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இவர் தயாரித்த படத்தில் தான் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## உயர்தர...

வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார். இதேவேளை, க.பொ.த சா/த பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஜனவரி 5ஆம் திகதிவரை மேற்கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## வெளியாகியது...

ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும், இதுவரையில் வழக்குத் தாக்கல் செய்யப்படாத வடக்கின் அனைத்து இளைஞர்கள், யுவதிகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வது அல்லது வழக்குத் தாக்கல் செய்யாமை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து தாமதமின்றி நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் முழுமையான அதிகாரங்களுடன் கூடிய குழு ஒன்றை நியமிப்பேன்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் நடைபெறாத வகையில் வரலாற்றில் முதன் முறையாக மனிதாபிமான நடவடிக்கைகளின் போது மக்கள் கைவிட்டுச் சென்ற வாகனங்களையும், மறைத்து வைக்கப்பட்ட தங்க நகைகளையும் இராணுவத்தினரிடம் உறுதிப்படுத்திய பின்னர் மீள மக்களுக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைகளை இவ்வருடம் செய்து முடிப்பேன்.

பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவிய காலகட்டத்தில் இராணுவத்தினரால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இராணுவத்தினருக்கு சொந்தமில்லாத காணிகள் மற்றும் கட்டடங்களை மனிதாபிமான நடவடிக்கைகள் முடிவுற்றதன் பின்னர் மீள உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளை இதுவரையில் பாரிய அளவில் முடித்துள்ளேன். தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அல்லாத வகையில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் இந்நடவடிக்கைகளை செய்து முடிப்பேன்.

பயங்கரவாதம் காரணமாக கடந்த காலங்களில் பிரதான அபிவிருத்தி பிரவாகத்தில் இருந்து ஒதுங்கி இருந்துள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இளைஞர், யுவதிகளை தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளில் சமாந்தரமான பங்காளிகளாக பங்கு பற்ற செய்வதற்காக சமூக உள்ளாக்கல் மற்றும் நல்லிணக்க செயற்பாட்டினை துரிதப்படுத்தும் முகமாக மத்தியகால வரையறைக்குள் உரிய வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துவேன்.

எதிர்வரும் வருடங்களில் தேசத்தின் மகுடம் செயற்றிட்டத்தினை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

நாட்டில் எந்தவொரு பகுதியிலாவது பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள எந்தவொரு மக்கள் சமூகத்தினருக்கும் உரிய நட்டஈடு கிடைக்கப் பெறாதிருக்கும் குடும்பங்களுக்குரிய பரிந்துரைக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம் இருக்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமூகங்களின் நபர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கையினை துரிதப்படுத்தி இவர்கள் அனைவரும் தங்களுடைய வீடுகளில் குடியேறுகின்ற உரிமையை தாமதிக்காமல் உருவாக்கிக் கொடுப்பேன்.

துரதிஷ்டவசமாக குறிப்பிட்ட சில இனவாத அல்லது மதவாத நபர்களினால் உருவாக்கப்பட்டுள்ள சமூக மோதல்களை முற்று முழுதாக தடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். இத்துடன் 'இடம்பெயர்ந்துள்ள மற்றும் முகாம்களில் மோதல்களுக்குள் சிக்குண்டுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து நபர்களினதும் பாதுகாப்பையும் அவர்களது மதவழிபாட்டுக்குரிய உரிமையையும் உறுதிப்படுத்துவேன்.

நாட்டில் அனைத்து மாகாணங்களுக்கும் உரிய கல்வி மற்றும் சுகாதார வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் பொது வசதிகள் என்பவற்றை சமமான முறையில் கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேரவில் வீதிக்கு மீள் புனரமைப்பு விரைவான நடவடிக்கை வேண்டும்

## மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர் கோரிக்கை



(கிளிநொச்சி)

பெருமளவு மக்கள் பயன்படுத்துகின்ற புதுமுறிப்பு அக்கராயன் ஊடாக வேரவில் வரை செல்லும் வீதி புனரமைக்கப்படல் வேண்டும் என ஈ.பி.டி.பி. யின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடந்தும் உரையாற்றுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவு மக்கள் பயன்படுத்துகின்ற மிக முக்கியமான வீதியாக புதுமுறிப்பு கோணவில் வன்னேரிக்குளம் ஊடாக வேரவில் வரை செல்லும் வீதி காணப்படுகிறது. பெருமளவுக்கு கிளிநொச்சியிலுள்ள எல்லா இணைப்பு வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வீதி மாத்திரம் இதுவரை எவ்வித புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படாமல் காணப்படுகிறது. வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வருகின்ற குறித்த வீதியினை வடக்கு மாகாண சபை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர்,

மேற்படி வீதியானது தற்போது மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றமையினால் பயணிக்கின்ற மக்கள் நாள்தோறும் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 15 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியினைப் பயன்படுத்தி வருகின்றனர். அத்தோடு மன்னார் ஊடாக கொழும்புக்கு போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் போது மேற்படி வீதியும் அதிகளவு மக்கள் பயன்படுத்துகின்ற வீதியாக மாற்றம் பெறுவதோடு விவசாய மற்றும் கடற்றொழில் உற்பத்திப் பொருட்கள் கிளிநொச்சி சந்தைக்கு வருகின்ற பிரதான வீதியாகவும் இந்த வீதி காணப்படுகிறது.

எனவே, வடக்கு மாகாண சபைக்கு கீழ் வருகின்ற குறித்த வீதியினை புனரமைப்பதற்கு விரைந்து நடவடிக்கையினை மேற்கொண்டு மக்கள் எதிர்கொள்கின்ற சிரமங்களை நிவர்த்தி செய்யுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் கேட்டுக்கொண்டார்.

# திவிநெகும பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கல்



வேலணைப் பிரதேசத்தில் ஜே/18 கிராம அலுவலர் பிரிவில் திவிநெகும பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

திவிநெகும அலுவலகத்தில் கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்ற இந் நிகழ்வில் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும், வேலணை பிரதேச ஈ.பி.டி.பி. யின் இணைப்பாளருமான சி. சிவராசா (போல்) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தென்னங்கன்றுகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வேலணை சமுதாய அடிப்படை வங்கி வலய முகாமையாளர் திருமதி எட்விசா, ஜே/18 திவிநெகும உத்தியோகத்தர் பொ.சர்மிளா, வேலணை சமுதாய அடிப்படை வங்கி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர் க.இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(கூ)

# மீனவர்கள் விடுதலை

கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதியன்று இந்திய கரையோரப் படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட 12 இலங்கையர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

தமிழக அரசாங்கம் விடுத்த பணிப்புரைக்கு இணங்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இந்த விடுதலைக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து நேற்று சிரேஷ்ட நீதிவான் நீதிமன்றம் இந்த 12 பேரையும் விடுவித்தது.

இவர்கள், கன்னியாகுமரி கடல் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

ரங்கா புத்தா மற்றும் சதீவ் புத்தா ஆகிய படகுகளில் சென்ற மீனவர்களே கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 28 இந்திய மீனவர்களை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# மின்சாரக் கம்பத்தில் உருவப் பொம்மை

## றிசாட் மீது வெறுப்பின் வெளிப்பாடு

(கொழும்பு)

அரசில் இருந்து விலகிய அமைச்சர் றிசாட் பதியுதீனை கேலி செய்து உருவப் பொம்மை ஒன்று வவுனியா, வைத்திய சாலைச் சுற்றுவட்டத்தில் உள்ள மின்சாரக் கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளது.

அதில் சுலோக அட்டைகளும் தொங்க விடப்பட்டுள்ளன. வர்த்தக கைத்தொழில் அமைச்சராகவும், வன்னி அபிவிருத்திக் குழு தலைவராகவும் இருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் றிசாட் பதியுதீன் நேற்று பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்தார்.

இதனை எதிர்த்தே உருவப் பொம்மை வைக்கப்பட்டுள்ளது. அதில் அவர் தமிழ் மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் துரோகம் இழைத்து விட்டார். அரசுடன் இருக்கும்போது பெருமளவிலான சொத்துக்களைச் சேர்த்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவிடம் பணம் வாங்கியே அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளார். போன்ற சுலோக அட்டைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

# கற்றல் உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்கு உதவி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பன்னிரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவக்கொழுந்து குடும்பத்தினர் சார்பில் அவரது பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் பங்களிப்பில் லண்டனில் வசிக்கும் வைத்தியகலாநிதி எஸ். சண்முகலிங்கத்தின் மூலம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழுள்ள 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம் இருபத்தைந்து பிள்ளைகளுக்குமாக மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பரிசுக்கூப்பன்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர் மரியதாஸ் கிறிஸ்ரியான் மற்றும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்க செயலாளர் மதர் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளருமாகிய திருமதி சுலோசனாம்பிகை தனபாலன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த 25 மாணவர்களுக்கான பரிசுக் கூப்பன்களை பெற்றோர்கள் முன்னிலையில் வழங்கி வைத்தனர். (63)

# ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தின் 10ஆவது பிரிவில் முதுகல்விமாணி (M.ed) கற்கை நெறியைப பூர்த்தி செய்தவர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

இதுவரையில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்காத முதுகல்விமாணி கற்கை பிரிவு மாணவர்கள் விரைவில் சமர்ப்பிக்குமாறு உயர்பட்ட பீடாதிபதி அலுவலக கல்வியியல் துறை தலைவர் திருமதி கலாநிதி அனுஷியா சத்தியசீலன் கேட்டுள்ளார்.

இதேவேளை, விரைவில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர்கள் ஆய்வு தொடர்பான குறும்நேர (5நிமிடம்) வெளிப்படுத்தல்களை முன்னிறுத்துவர். 11ஆவது பிரிவு மாணவர்களுக்கு விரைவில் தலைப்புக்களை வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர். (92)

# பீடை நாசினிகளுக்கு தடை

1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நாட்டின் சில பகுதிகளுக்கு சில பீடைக் கொல்லிகள் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட் டுள்ளது

இதன்படி, கிளைபோசெட், புரோப்பனில், காபறில், குளோபைறிபொஸ், கார்போபியூரான் போன்ற பீடைக் கொல்லிகள் அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல், மொனராகலை மாவட்டங்களில் விற்பனைக்கு தடை செய்யப்பட்டுள்ளது

# பொலிஸ் நடமாடும் சேவை இறுதிநாள் நிகழ்வுகள்



பொலிஸ் நடமாடும் சேவையும், பரிசளிப்பு விழாவும் நேற்று இயக்கச்சி பாடசாலையில் இடம்பெற்றது.

கடந்த ஒரு மாத காலமாக சுகாதார விழிப்புணர்வு, குடும்ப வன்முறை பிரச்சினைகளுக்கான தீர்வு, சட்ட ஆவணங்களை பெறுவதற்கான உதவிகள், இரத்ததானம், விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

இதன் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. பளை பொலிஸ் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரன், கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் சேனாதிபதி, புலோப்பளை பீங்குத்தந்தை ஜஸ்ரின், பளைப் பிரதேச வைத்திய அதிகாரி மைதிலி சிவானந்தன், பளை காற்றாலை மின் உற்பத்தி நிலைய பிரதான முகாமையாளர் சாமிக்க பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். (37)

# விருது பெற்றவர்கள் கௌரவிப்பு

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் கலாபூசணம் விருது பெற்ற ஆறு கலைஞர்களையும் கௌரவிக்கும் விழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த ஜெசீலன் தலைமையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வினைக் கலாசார அலுவல்கள் திணைக்களகமும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களகமும் இணைந்து வழங்கியது. இவ் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் மற்றும் கலைஞர்கள். பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பஸ்வண்டியில் திருட்டு பயணிகள் கடும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் தனியார் சிற்றூர்தியில் பயணித்த பெண்ணொருவரின் கைப்பை காணாமற் போனதைத் தொடர்ந்து சிற்றூர்தியில் பயணித்த பயணிகள் சோதனையிடப்பட்ட போதிலும் கைப்பை கிடைக்காததையடுத்து பயணிகள் தொடர்ந்து பயணித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

கச்சேரியில் இருந்து யாழ். நகர் நோக்கிச் சென்ற சிற்றூர்தியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ். நகர் நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்த பெண்ணொருவரின் கைப்பையும் தொலைபேசியும் பஸ்ஸில் பயணித்த வேளை காணாமல் போயுள்ளது.

இதனால் அப்பயணியின் வேண்டுகோளுக்கமைய யாழ். பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட பஸ்ஸில் பயணித்த அனைவரும் சோதனை செய்யப்பட்ட போதிலும் அவை கண்டு பிடிக்கப்படாத நிலையில் பொருட்களை இழந்த பெண் முறைப்பாடு எதனையும் பதிவு செய்யாத நிலையில் பயணிகள் அனைவருடனும் பஸ் போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப் பட்டதாக யாழ். பொலிஸார் நேற்றுத்தெரிவித்தனர். (இ.25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.